Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38 கதிர் : 52 | திங்கட்கிழமை 17 ஜனவரி 2022 | தை 04 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

**கொரோனா**
நேற்று 690
மொத்தம் 5,96,347

**உயிரிழப்பு**
நேற்று 14
மொத்தம் 15,211

# மீண்டும் சந்திரிகா!

- உருவாகின்றது புதிய கூட்டணி
- கொழும்பு அரசியலில் பரபரப்பு

கொழும்பு, ஜனவரி 17

நாட்டில் ராஜபக்ச ஆட்சிக்கு எதிராக பெரும் அதிருப்தி அலை தோற்றம் பெற்றுள்ள நிலையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் புதிய அரசியல் கூட்டணி ஒன்றை ஆரம்பிக்கும் முன்னாயத் தங்கள் நடைபெறத் தொடங்கியுள்ளன. தென்னிலங்கை அரசியலில் இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. 15



## மின்துண்டிப்பு தொடரும்?

கொழும்பு, ஜன.17

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நீர்த் தேக்கங்களில் நீர்மட்டம் குறைவு போன்ற காரணங்களால் நாட்டில் பெரும் மின்வெட்டு தொடரலாம் என்று இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாளாந்தம் 4 மணிநேர மின் 15

## எரிபொருள் இறக்குமதிக்கு 4,000 பில். டொலர் தேவை!

கொழும்பு, ஜன.17

மின்சாரம் மற்றும் போக்குவரத்துத் துறைகளுக்கு இந்த ஆண்டு இறுதிவரை தடையின்றி எரிபொருளை வழங்க வேண்டுமானால் 4 ஆயிரம் பில்லியன் அமெ 15

## சு.கட்சியின் ஆதரவின்றி நாமலுக்கு எதுவுமில்லை

*சவால் விடுகிறார் தயாசிறி*

கொழும்பு, ஜன.17

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு இன்றி அமைச்சர் நாமல் ராஜபக்ச எதிர்காலத்தில் எவ்வாறு ஜனாதிபதி அல்லது பிரதமர் பதவிக்கு வருவார் என்பதை நாம் பார்த்துக் கொள்கின்றோம் என்று தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர. 15



யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நேற்று முத்தமிழ் விழா நடத்தப்பட்டது. இயற்றுறை, இசைத்துறை, நாடகத்துறை என மூன்று அமர்வுகளாக இந்த முத்தமிழ் விழா நடைபெற்றது. (எ-20)

## ஒமிக்ரோனுடன் கொரோனா 'குளோஸ்!'

சன்ன ஜயசுமன தெரிவிப்பு

கொழும்பு, ஜன.17

ஒமிக்ரோன் திரிபுடன் உலகளாவிய ரீதியில் கொரோனாத் தொற்று முடிவுக்கு வரலாம் என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். 15



## மிதிவெடி மீட்பு

கொடிகாமம், ஜன.17

கெற்பேலி துறைமுகப் பகுதியில் மிதிவெடி ஒன்று நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ரோந்து சென்ற பொலிஸாரே இந்த மிதிவெடியை அவதானித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. அதைய 15

## கூட்டமைப்புடன் பேச கோத்தாபய திட்டம்!

கொழும்பு, ஜன.17

அரசியல், பொருளாதாரம் எனப் பலமுனை நெருக்கடிகளை அரசு எதிர்கொண்டுள்ள நிலையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சந்திப்பு ஒன்றை நடத்த ஆலோசித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்தவும், தமிழ் மக்களின் மனங்களை 15

## ஒமிக்ரோன் திரிபு நாட்டில் ஆதிக்கம்

பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன.17

கொரோனா வைரஸின் ஒமிக்ரோன் உப திரிபு நாட்டில் ஆதிக்கம் செலுத்தும் திரிபாக மாறியுள்ளது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது. 15

வவு. மருத்துவமனை வளாகத்தில்

## வன்முறைக் கும்பலின் அட்டகாசத்தால் பதற்றம்!

வவுனியா, ஜன.17

வவுனியா பொது மருத்துவமனைக்குள் சென்ற கும்பல் ஒன்று அங்கிருந்த ஒருவரைத் தாக்க முயன்றுள்ளது. அந்த இடத்துக்கு உடனடியாகப் பொலிஸார் வந்ததை அடுத்து, அந்தக் கும்பல் அங்கிருந்து தப்பியோடியுள்ளது. நேற்றுப் பிற்பகல் நடந்த இந்தச் சம்பவத்தால் மருத்துவமனை வளாகத்தில் பெரும் பதற்ற நிலைமை ஏற்பட்டது.

நேற்றுப்பிற்பகல் மருத்துவமனைக்கு வந்த சிலர், நோயாளர்களைப் பார்வையிட வந் 15

முச்சந்தி முரளி



"அப்ப அம்மையார் இறங்கினால் இனி ஐயாமார் ஆட்சிக்கு ஆப்புத்தான் பாருங்கோ"

## தவறான முடிவெடுத்து இளைஞர் உயிரிழப்பு

சாவகச்சேரி, ஜன.17

தவறான முடிவெடுத்து 21வயது இளைஞர் ஒருவர் உயிரை மாய்த்துள்ளார். 15

12 Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2022
21 22 23 ஜனவரி January
10.00am - 8.00pm
முற்றவெளி மைதானம்
இன்னும் 4 நாட்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் அனுபவித்திருந்த

# பொருளாதாரத் தடை இப்போது சிங்களவர்களுக்கும்!

## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு



**கிளிநொச்சி, ஜன. 17**

**பொருளாதாரத் தடை என்பது தமிழர்களுக்குப் புதிதான ஒரு விடயமல்ல. ஆனால், பொருளாதாரத் தடையை தற்போதுதான் சிங்களவர்கள் உணருகிறார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.**

உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் நிகழ்வும் பாரம்பரிய தமிழர் விளையாட்டு நிகழ்வு உருத்திரபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

அந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறீதரன் மேலும் தெரிவிக்கையில்;

நாம் கடும் நெருக்கடியோடு வாழ்ந்தவர்கள்.

90களில் இலங்கையில் மண்ணெண்ணெய் 12 ரூபாவுக்கு விற்பனைசெய்யப்பட்டபோது நாம் 300 ரூபாவுக்கு வாங்க வேண்டிய நிலைமை இருந்தது. அப்போது யூரியாவை கண்ணால் காணவில்லை. உடுப்பு துவைப்பதற்கு சவர்க்காரங்களைக் காணவில்லை. இந்த மண்ணில் பெற்றோலைக் கண்டிருக்கவில்லை. சிமெந்துக் கம்பிகளை கண்டிருக்கவில்லை. அவ்வாறிருந்தும் இந்த மண்ணிலே நாங்கள் வாழ்ந்து இருந்தோம். அதனை இப்போதுதான் சிங்கள மக்கள் படிக்கவும் உணரவும் ஆரம்பித்திருக்கிறார்கள்.

### பண்பாட்டை கைவிடாதீர்

தமிழர்களின் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் நாங்கள்தான் பேணிவளர்க்க வேண்டும்.

நாங்கள்தான் அவற்றைக் கட்டிக்காக்க வேண்டும். நாங்கள் அதற்கான முதுகெலும்பாக செயற்பட வேண்டும்.

மிக முக்கியமாக தமிழர்களிடமிருந்து அருகிப் போகின்ற போர்த்தேங்காய் உடைத்தல் தலையணைச்சமர், முட்டி உடைத்தல், கிளித்தட்டு போன்ற நிகழ்வுகளை நடத்த வேண்டும்.

### ஏக்கருக்கு 8 பை நெல்

இந்தமுறை விவசாயிகளுக்கான பசளைகள் தடை செய்யப்பட்ட காரணத்தால் விவசாயிகளின் அறுவடை மிகப்பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது.

ஓர் ஏக்கரில் 8 அல்லது ஒன்பது பை நெல்லைத்தான் அறுவடை செய்கின்ற அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது.

ஆனால் அரசாங்கம் இப்போது மியான்மரிலிருந்தும் வேறு நாடுகளிலிருந்தும் எத்தனையோ இலட்சம் மெற்றிக்தொன் அரிசியைக் கொள்வனவுசெய்யத் தயாராக இருக்கிறது. அங்கு இரசாயன முறையில் தயாரிக்கப்பட்ட அரிசியை இங்கு இறக்குமதி செய்ய முனைகிறார்கள்.

இலங்கையில் ஏனைய பகுதிகளில் சிலவற்றில் இனித்தான் விதைப்பு ஆரம்பமாக இருக்கின்றது.

வடக்கு- கிழக்கில் விவசாயிகள் நெல் அறுவடை செய்கின்ற காலத்தில் இந்த அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து அரசியை இறக்குமதிசெய்வது எமது மக்களை துன்பத்துக்கு உள்ளாகும் - என்றார். (த-6)

# மாலைதீவின் சபாநாயகர் இலங்கைக்கு வருகை

கொழும்பு, ஜன. 17

மாலைதீவின் சபாநாயகர், மொஹமட் நஷீட், நேற்று இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் யூ.எல்.504 விமானம் மூலம் அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் அவரை வரவேற்றனர்.

இவர் நாளைமறுதினம் வரை இலங்கையில் தங்கியிருப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4-இ)



57ஆவது படைப்பிரிவினரால் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமை மருத்துவ உபகரணங்கள், மருத்துவமனைப் பணிப்பாளர் சுகந்தனிடம் கையளிக்கப்பட்டன. (ரி1-113)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கண்டாவளை கோனக்குளம் கற்பக விநாயகர் தேவஸ்தான பிரதம குருக்கள் சாமஸ்ரீ தேசமாணி சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்காந்தராசக் குருக்களின் அருளாசியுரையும் வேதபாராயணமும் நாளைமறுதினம் காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-ரி1)

# கிராமிய நிகழ்வும் கலாசார ஊர்வலமும்

இந்து கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் வவுனியா பிரதேச செயலகம் இணைந்து நடத்தும் பழனி முருகனின் தெய்வீக கிராமிய நிகழ்வும் கலை, கலாசார பாரம்பரிய ஊர்வலமும் வவுனியா, சிதம்பரபுரத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அபிராமி உபாசகி ஆன்மிக நிலையம், பழனிமுருகன் அறநெறி பாடசாலை ஆகியவற்றின் ஏற்பாட்டில், சிதம்பரபுரம் பகுதியில் மு.ப. 10 மணியளவில் நிகழ்வு நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக இந்துமத விவகார இணைப்பாளர் சிவஸ்ரீ இராமசந்திரக்குருக்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

வவுனியா இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரம்மஸ்ரீ. எஸ்.குகனேஸ்வரசர்மா வரவேற்புரை நிகழ்த்தவுள்ளார். வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தலைமையில் பிரதம அதிதிகளாக மாவட்டச்செயலர் பி.ஏ.சரத்சந்திர, மாவட்ட மேலதிக செயலர் தி.திரேஸ்குமார் ஆகியோர் கலந்துகொள்வர்.

ஆசிகுளம் பகுதி 6 அறநெறிப் பாடசாலை மாணவர்களைச் சேர்ந்த 150 மாணவர்கள் இந்த நிகழ்வில் பங்குபற்றி பாராட்டு மற்றும் உதவிகள் பெறவுள்ளனர். அத்துடன் 15 அறநெறி ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன் இந்துப் பண்பாட்டு நிதியத்தின் உதவியும் தொண்டு நிறுவனங்களின் உதவிகளும் வழங்கப்படவுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-110)

# புதிய திருமணச்சட்டம் 50 பெண்கள் பாதிப்பு

கொழும்பு, ஜன. 17

இலங்கையில் விதிக்கப்பட்டுள்ள புதிய திருமணச் சட்டம் காரணமாக, வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் மற்றும் இலங்கையின் வடபகுதியைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட பெண்களின் திருமணம் தடைப்பட்டுள்ளது என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பயங்கரவாதச் செயற்பாடு, போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் முயற்சியில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடிக்கும் நோக்கிலேயே இந்தப் புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைவாக வெளிநாட்டவர்கள் தங்கள் அடையாளங்களை பாதுகாப்பு அமைச்சுக்கு வெளிப்படுத்த வேண்டும். இதுவரையில் அவ்வாறான சட்டம் செயற்படுத்தாமையால், இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை கண்டுபிடிக்க முடியாத நிலைமை புலனாய்வுப் பிரிவுக்கு ஏற்பட்டிருந்தது.

எனினும் புதிய சட்டத்தால் புலம்பெயர் தமிழர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-4-இ)

யாழ்ப்பாணத்துக்கு

# பரிசுப்பொதியில் 4,000 போதை மாத்திரைகள்

கொழும்பு, ஜன. 17

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஒருவருக்கு பரிசுப்பொதியொன்றில் 4 ஆயிரம் போதை மாத்திரைகள் அனுப்பப்பட்டுள்ளன. சுமார் 26 மில்லியன் ரூபா பெறுமதியான குறித்த மாத்திரைகள், நெதர்லாந்தில் இருந்து கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனைக்கு பரிசுப் பொதியில் அனுப்பப்பட்டுள்ளன என்று சுங்கப்பிரிவின் ஊடகப் பேச்சாளர் சுதத் சில்வா தெரிவித்துள்ளார்.

ஒரு கிலோ 600 கிராம் எடை கொண்ட சுமார் 4 ஆயிரம் மாத்திரைகள், அட்டைப் பெட்டியில் நுட்பமாக மறைத்து வைக்கப்பட்டிருந்தன. கொழும்பு, வெள்ளவத்தையில் வசிக்கும் 30 வயதுடைய நபர் ஒருவர், இந்த பரிசுப் பொதியைப் பெறுவதற்காக கொழும்பு மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

இதனையடுத்து குறித்த நபர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரும் போதை மாத்திரைகளுடன், மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரப் பேரழிவினால் இலங்கை சோமாலியாவாகும்!

## தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தர் சரவணபவன் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜன. 17**

**அரசாங்கம், பொருளாதார நிலைமையை கவனமாக அளவீடு செய்து, பொருளாதாரத்தை சரியாகக்கொண்டுசெல்லாவிட்டால், நாடு சோமாலியாபோன்ற நிலைக்குத் தள்ளப்படும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.**



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட்டுக்கோட்டை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் பொங்கல் விழா நடைபெற்றது. அதில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் மற்றும் அவரது பாரியார் சம்பிரதாய பூர்வமாக பொங்கல் நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். அதில் அவர் உரையாற்றுகையில்

**பொருளாதாரக் கணிப்பு அறவே இல்லை!**

பொருளாதார ரீதியான கணிப்புகள் இடம்பெறவில்லை. அரசியல் ரீதியாகவே பொருளாதாரக் கணிப்புகள் தற்காலத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. எந்தவழியிலும் நாங்கள் பணம் எடுக்க முடியாது என்றநிலை காணப்படுகின்றது. அதனால், அரசியல் ரீதியாக இதனைப் பெறுவதற்கு முயற்சிக்கிறார்கள்.

வெளிநாடு ஒன்று, ராஜபக்ச அரசாங்கத்துக்கு பெருந்தொகை நிதி வசதிகளை வழங்கிவருகின்றது. அவர்களும் சும்மா வழங்கவில்லை. ஏதோ ஓர் உள்நோக்கம் வைத்துத்தான் வழங்குகின்றார்கள். அந்தநாடு பணத்தை வழங்கிய பின்னர், அந்த நாட்டின் அணுகுமுறை எவ்வாறு இருக்கும் என்று கூறமுடியாது.

ராஜபக்சவினர் சர்வதேச நாணய நிதியத்தை நாடிச்செல்லவும் மறுக்கிறார்கள். நாணய நிதியம் வழங்குகின்ற அறிவுறுத்தல்கள் தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்பதால் அவ்வாறு சொல்கிறார்கள்.

இராணுவப் பதவி வகித்தவர்கள் செயலாளர் பதவிகளை அலங்கரித்துக்கொண்டு இருக்கிறார்கள். அதனால், ஆராய்ச்சிசெய்து அணுகவேண்டிய அரசியல் சார்ந்த சகல விடயங்களும் கைவிடப்பட்டுள்ளன என்றே தோன்றுகின்றது - என்றார்.

இந்தப் பொங்கல் நிகழ்வில் வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் ஜெபநேசன், பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் மூத்த உறுப்பினர்கள், வட்டுக்கோட்டை தொகுதி தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணி உறுப்பினர்கள், உதய வாழ்வு தையல் கற்கை ஆசிரியர், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(து-125)

# நாடாளுமன்றக் கூட்டத்தொடர் வைபவரீதியாக நாளை!

கொழும்பு, ஜன. 17

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் வைபவரீதியாக ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வருகைதரும் நிகழ்வு அவருடைய ஆலோசனைக்கு அமைய மிகவும் எளிமையான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தமுறை மரியாதை துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுத்தல் மற்றும் வாகன அணிவகுப்பு என்பன இடம்பெறாது. எனினும், ஜனாதிபதியை வரவேற்கும் முகமாக நாடாளுமன்ற வளாகத்தில் பொலிஸ் கலாசாரப் பிரிவின் பங்களிப்புடன் கலாசார மரியாதை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

ஆரம்பநிகழ்வுக்கு வெளிநாட்டு இராஜதந்திரிகள், முன்னாள் ஜனாதிபதிகள், பிரதமர்கள், பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்ட விருந்தினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் எதிர்வரும் 19ஆம் மற்றும் 20ஆம் திகதிகளில் சபை ஒத்திவைப்புவேளை விவாதம் நடைபெறவுள்ளது.

(து-44)

# 2 வாரங்களில் 3,900 பேருக்கு டெங்கு

கொழும்பு, ஜன. 17

இந்த வருடத்தின் முதல் இரண்டு வாரங்களில்மட்டும், 3 ஆயிரத்து 900க்கும் அதிகமானவர்களுக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் முதல் 2 வாரங்களுடன் ஒப்பிடுகையில், இந்த வருடத்தில் தொற்று வீதம் அதிகரித்துள்ளது. நுளம்பு பெருகும் இடங்களை இல்லாதொழித்து, டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்த அதிகாரிகளுக்கு உதவ வேண்டும் என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக மருத்துவர் ஷிலந்தி செனவிரதன தெரிவித்துள்ளார்.

(ம-4-இ)




**நெடுந்தீவுப்பக்கமாக ஊரிப்பட்ட செத்துப்போன மீன்கள் கரையொதுங்கினதை செய்திகளில அறிஞ்சிருப்பியள். ஆனால் என்ன காரணத்துக்காக அந்த மீன்கள் கரையொதுங்கினது எண்டு இன்னும் கண்டுபிடிக்கேலாம இருக்கு. இலங்கைக் கடலுக்க மீன்பிடிக்க வாற இந்திய மீனவர்களின்ர வள்ளங்கள் தான் இப்பிடி அடியோட மீன்களையும் அள்ளி, அழிச்சிப் போட்டுதுகள் எண்டுதான் முதல்ல கதை வந்தது. அப்பிடியும் நடந்திருக்கும்தான். எங்கையாவது மீன்பாடு கூடின இடத்தை இந்தியன் ரோலர் அள்ளினால் இப்பிடி வகைதொகையா மீனோட சேர்ந்து மீன்குஞ்சுகளும் பிடிபட வாய்ப்பிருக்கு. அப்பிடி பிடிபட்ட மீன்குஞ்சுகளைத்தான் கொட்டிப் போட்டு போனதால, அதுகள் கரையொதுங்குது எண்டுதான் கனபேர் நம்புகினம்.**

**ஆனால் அதில ஒரு லொஜிக் மிஸ்டேக் இருக்கு கண்டியளோ. இந்தியன் ரோலர்கள் இப்பதான் வருகுதெண்டில்லை. வருசக்கணக்கா அதுகள் இஞ்ச அத்துமீறி வந்துகொண்டுதானே இருக்கு. அப்பவெல்லாம் இப்பிடி மீன்குஞ்சுகள் அகப்படேலையோ? ஏன் அப்பமட்டும் மீன்கள் மிதக்காமல், இப்ப மிதக்க வேணும்? அதோட மீன்களை விக்கமுடியாட்டியும் அதுகளைக் கொண்டு போனால், கருவாடு போட்டும் கொஞ்சம் காசு பாக்கலாம். அதுகளொண்டும் இந்திய மீனவருக்கும் தெரியாதெண்டில்லையே. அப்ப ஏன் கொட்டப்போயினம்? அதோட ரோலர்களில அகப்பட்ட மீனைக் கொட்டுற எண்டா மேலை எடுத்தவுடன் கொட்டியிருக்க வேணும். கடலுக்க ரோலர் இருக்கும் வரை மீன்குஞ்சுகள் உயிரோடதானே இருந்திருக்கும். மேல எடுத்தவுடன் போட்டாலும், கனக்க மீன் குஞ்சுகள் தப்பியிருக்கும். இப்பிடிக் கும்பலாச் செத்திருக்காதுகள்.**

**அப்ப என்ன நடந்திருக்கலாமெண்டு நினைக்கிறியள்? இப்பிடி மீன்கள் கும்பலாச் செத்து ஒதுங்கிறது நெடுந்தீவில இதுதான் முதல்முறையா இருக்கலாம், ஆனா நிறைய இடங்களில இப்பிடிக் கனதரம் நடந்திருக்கு. குறிப்பாச் சொல்லோணும் எண்டால் மட்டக்களப்பில சுனாமி வாறதுக்கு முதல் இப்பிடி மீன்கள் ஆயிரக்கணக்கில செத்து மிதந்ததுகள். அதை மாதிரி சில வருசங்களுக்கு முதல் முல்லைத்தீவு நந்திக்கடல் பக்கமாயும் இப்பிடி மீன்கள் செத்து மிதந்ததுகள். இதுகளுக்கு என்ன காரணம் எண்டு சரியாக் கண்டுபிடிக்க முடியாட்டியும், அந்தக் கடல் பரப்புகளில நடந்த ஏதோ ஒரு மாற்றம் ஒத்துக்கொள்ளாதபடியால தான் அந்த மீன்களெல்லாம் செத்திருக்க வேணும் எண்டு பொதுவா ஒரு முடிவெடுத்தவை. இப்பவும் பசுபிக் கடலில ஒரு பெரிய எரிமலை வெடிச்சிருக்கு. அதால கனபகுதியளில சுனாமியும் அடிச்சிருக்கு. இன்னும் சில இடங்களில சுனாமி வரலாமெண்டு எச்சரிக்கையும் செய்திருக்கினம். ஏன் அப்பிடிப்பட்ட காரணத்தால இந்த மீன்கள் செத்திருக்கக் கூடாது? எல்லாத்துக்கும் இந்திய மீனவரில மட்டும் பழியைப் போடாமல் கொஞ்சம் வேற பக்கமும் யோசிச்சுப் பார்த்தால் ஒண்டும் குறைஞ்சு போடாது தானே...!**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டவர்களாலேயே ஒமிக்ரோன் பரவுகை!

சுகாதாரத்துறை சங்க தலைவர் ரவிகுமுதேஸ் எச்சரிக்கை



**கொழும்பு, ஜன. 17**

**நாட்டில் ஒமிக்ரோன் பரவல் அதிகரிப்பதற்கு, தொற்றால் பாதிக்கப்பட்ட பலர் நாட்டுக்குள் நுழைவதே காரணம் என்று சுகாதாரத் தொழில்சார் துறையினர் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஸ் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஒமிக்ரோன் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது சுகாதார அமைச்சின் செயற்றிறன் இன்மையை வெளிப்படுத்துகின்றது.

புதிதாக 160 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை சுகாதார அமைச்சின் குறைபாடுகளை வெளிப்படுத்தியுள்ளது.

வெளிநாட்டுப் பயணிகளுக்கு சோதனைகளை மேற்கொள்வது நாட்டுக்குச் சுமையாக மாறியுள்ளது.

இலங்கைக்கு வந்த பலர் பாதிக்கப்பட்டிருப்பது நாட்டிலிருந்து அவர்கள் வெளியேறும் போதே தெரிய வருகின்றது.

இதன்மூலம் ஒமிக்ரோனால் பாதிக்கப்பட்ட பலர் நாட்டுக்குள் நுழைகின்றனர் என்ற முடிவுக்கு வரமுடியும். இதனைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியும்.

ஆனால், நாட்டுக்குள் நுழைபவர்களைச் சோதனையிடுவது நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் எதிர்காலத்தில் மிகவும் கடினமான தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிவரும் -என்றார். (ம-4-இ)

## நான்காவது தடுப்பூசி செலுத்த அரசு தயார்

கொழும்பு, ஜன. 17

கொரோனாவுக்கு எதிரான நான்காவது தடுப்பூசி தேவைப்பட்டால் அதனைச் செலுத்துவதற்கு அரசு கவனம் செலுத்தியுள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தடுப்பூசியின் நான்காவது டோஸ் தேவைப்பட்டால், நாட்டுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும். தடுப்பூசி வேலைத் திட்டத்தின் கீழ் இதுவரை கொள்வனவு செய்யப்பட்ட டோஸ்களுக்காக, சுமார் 35 கோடி ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

## சதொச ஊடாக பிளாஸ்ரிக் போத்தல்கள் மீள்சுழற்சி

சஜித் பாராட்டு



கொழும்பு.ஜன.17

நாடளாவிய ரீதியில் சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக பிளாஸ்ரிக் போத்தல்களை மீள்சுழற்சி செய்யும் முயற்சிக்கு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராட்டியுள்ளார்.

சதொச விற்பனை நிலையங்களில் 35ரூபா விலையுடைய புதிய தண்ணீர்போத்தல்கள், விற்பனை நிலையங்களுக்குத் திரும்பும்போது, ஒவ்வொரு போத்தலுக்கும் 10ரூபா திருப்பிச் செலுத்தப்படும். நுகர்வோர் குறைந்த விலையில் தண்ணீர்ப் போத்தல்களைக் கொள்வனவு செய்து, சுற்றுச்சூழலில் சேர்க்கப்படும் பிளாஸ்ரிக்கின் அளவைக் குறைப்பதே எமது நோக்கம் என்று அமைச்சர் குணவர்தன தெரிவித்திருந்தார். பிளாஸ்ரிக் போத்தல்களைப் பயன்படுத்தும் அனைத்து உற்பத்தியாளர்களுக்கும் இது பெரும் முயற்சியாக அமையும். பிளாஸ்ரிக் சேகரிப்பானது, மீள்சுழற்சி செய்வதை மிகவும் எளிதாக்கும் என்று சஜித் பாராட்டியுள்ளார். (ம-4-இ)

## பேருந்துக்கு தீ வைப்பு

கொழும்பு, ஜன. 17


பேருந்து மோதி, சைக்கிளில் சென்றவர் உயிரிழந்ததை அடுத்து, ஆத்திரமடைந்த பிரதேசமக்கள் பேருந்துக்குத் தீ வைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அவிசாவளை மாலியன்கம ரிட்டிகஹவெலப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. இதனால் அந்தப் பகுதியில் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களை ஏற்றிச்சென்ற பேருந்தே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. (ம-4-இ)

## ஒமிக்ரோன் திரிபு வைரஸால் மீண்டும் கொரோனா அலை!

மருத்துவர் ஆனந்த எச்சரிக்கை



கொழும்பு, ஜன. 17

நாட்டில் ஒமிக்ரோன் திரிபு வைரஸ் பரவுவதால், மீண்டும் கொரோனா அலை ஏற்படும் அபாயம் உள்ளது என்று தேசிய தொற்று நோய் விஞ்ஞான நிறுவகத்தின் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம எச்சரித்துள்ளார். நாட்டில் கடந்த இரண்டு வாரங்களை ஒப்பிட்டுப்பார்க்கும்போது, தொற்று உறுதியானவர்களின் எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ளது. இதன் காரணமாக மீண்டும் கொரோனா அலை ஏற்படக்கூடும். ஒமிக்ரோன் திரிபானது மிக இலகுவாகப் பரவக்கூடியது. அறிகுறிகள் குறைந்துள்ளபோதிலும், பெரும்பாலானோருக்கு அந்த திரிபு தொற்றக்கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

## சுதந்திரக் கட்சிக்குள் முரண்பாடுகளில்லை!

அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 17

சுதந்திரக் கட்சிக்குள் உள்ளக முரண்பாடுகள் எதுவும் இல்லை என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில கட்சிகள் கிராமங்களுக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. சுதந்திரக் கட்சிக்கு அவ்வாறான கவலை இல்லை. சுதந்திரக் கட்சியின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் மத்தியகுழு மற்றும் அமைப்பாளர்கள் உந்துதலுடனும், ஆதரவுடனும் உள்ளனர். கட்சிக்குள் பிளவுகள் எதுவும் இல்லை.

சுதந்திரக் கட்சிக்குள் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கொரோனா பரவுவதற்கு முன்னரே அந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் இருந்து கட்சித் சீர்திருத்தங்களை மேற்கொள்ள முடியாது. எனவே கட்சிப் பிரதிநிதிகள் கிராமங்களுக்குச் சென்று கூட்டங்களை ஏற்பாடு செய்து வருகின்றனர். சுதந்திரக்கட்சியின் முயற்சிகளால் எந்தவொரு தனிநபரும் கவலையடையவேண்டாம்- என்றார். (ம-4-இ)

## பாதுகாப்பான நாடாக இலங்கையும் தெரிவு



கொழும்பு, ஜன. 17

உலக சுற்றுலாப் பேரவையால், கொரோனாத் தொற்றுக்கு மத்தியில், பயணிக்கக்கூடிய பாதுகாப்பான நாடாக இலங்கை பெயரிடப்பட்டுள்ளது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவி கிமர்லி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

2018ஆம் ஆண்டில் இலங்கை 2.3 மில்லியன் சுற்றுலாவிகள் வருகையைப் பதிவு செய்துள்ளது. 2022ஆம் ஆண்டில் அதில் அரை [illegible] தாண்டு நவம்பர் மாதம் 44 ஆயிரத்து 294 பேரும், டிசெம்பர் மாதம் கிட்டத்தட்ட 90 ஆயிரம் பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கையில் கொரோனாத் தொற்றை விஞ்ஞான ரீதியில் நிர்வகிப்பதன் மூலம் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. இலங்கையின் இணையற்ற இயற்கை வளங்களையும், மக்களுக்குள் பொதிந்துள்ள கலாசாரத் திறனையும், விஞ்ஞானரீதியாக ஊக்குவிப்பதன்மூலம் இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகளை [illegible] ஈர்க்க நடவடிக்கை எடுப்பதே எமது பிரதான நோக்கம். தொற்றுக்குப் பின்னர் பயணிகள் தேடும் அனைத்தும் நம் நாட்டில் உள்ளன. முழுமையாகத் தடுப்பூசி செலுத்திய பயணிகளுக்கு நிம்மதியான பயணத்தை நாங்கள் உருவாக்கியுள்ளோம். விருந்தோம்பலின் அரவணைப்புடன் சுற்றுலாவிகளை வரவேற்க இலங்கை தயாராக உள்ளது -என்றார். (ம-4-இ)

## கட்சித்தலைவர்களின் கூட்டம் ஒத்திவைப்பு

இந்த வாரம் நடைபெற இருந்த ஆளும் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் ஆளும் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அநுராதபுரத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள உள்ளதால், கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது என்று ஒருங்கிணைப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்தே கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 மணித்தியாலங்கள் மின்சாரம் தடைப்படும்

### ஊழியர் சங்கம் எச்சரிக்கை



**கொழும்பு, ஜன. 17**

**5 வருடங்களுக்கு ஒருமுறை நாடு கடும் வறட்சியை எதிர்கொள்ள நேரிட்டுள்ளதால், எதிர்வரும் காலங்களில் நாட்டில் 24 மணித்தியாலங்கள் மின்வெட்டு ஏற்படக்கூடும் என்று இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவிக்கையில்:

கடந்த ஆண்டுகளைவிட தற்போது மழை வீழ்ச்சி குறைவாகக் காணப்படுகின்றது. நீர் மின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் படிப்படியாகக் குறைந்து வருகின்றது. நாட்டில் அதிக மழை பெய்து, இரண்டு வாரங்களுக்கும் குறைவான காலமே கடந்துள்ள போதிலும், தற்போது நீர்த்தேக்கங்களில் சேறுதான் சேருகின்றது. நீர் சேரவில்லை. மின்வெட்டு ஏற்பட்டால் மின்சாரத்தை மீட்டெடுக்க போதுமான மின் நிலையங்கள் மின்சார சபையிடம் இல்லை.

இது ஒரு மோசமான சூழ்நிலை. தற்போது நடைமுறைப்படுத்தப்படும் மின்வெட்டு தொடர்பில் அதிகாரிகள் முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

மின்சாரத் துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு அரசு தீர்வுகளை வழங்கத் தவறியதன் விளைவாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது -என்றார். (ம-4-இ)

## கங்கையில் நீராடிய இருவர் சடலமாக மீட்பு

கொழும்பு, ஜன. 17

களு கங்கையில் நீராடிக் கொண்டிருந்த நால்வர் நீரில் மூழ்கிய நிலையில், அவர்களில் ஒருவர் உயிருடனும், இருவர் சடலங்களாகவும் மீட்கப்பட்டுள்ளனர். மற்றையவரைக் காணவில்லை. அவர் தேடப்பட்டு வருகின்றார்.

அங்குராவதொட்ட பகுதியைச் சேர்ந்த 22 மற்றும் 40 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். காணாமற்போனவரைத் தேடும் பணி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சம்பவம் தொடர்பில் சிறிபாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-4-இ)

## கஜுவத்தை கடலில் மாயமான சிறுவர்கள் சடலங்களாக மீட்பு

மட்டக்களப்பு, ஜன. 17

கல்குடா, கும்புறுமூலை கஜுவத்தைக் கடலில் கடந்த வெள்ளிக்கிழமை காணாமற்போன இரு சிறுவர்களும் நேற்றுமுன்தினம் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். கிரான் பகுதியைச் சேர்ந்த ஏழு சிறுவர்கள் குறித்த கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது, இருவர் கடலில் மூழ்கியுள்ளனர். காணாமற்போன இரண்டு சிறுவர்களையும் தேடும் பணிகள் தீவிரமாக இடம்பெற்றன. இந்த நிலையில் கிரான் பகுதியைச் சேர்ந்த இரு சிறுவர்களும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். சிறுவர்களின் சடலங்கள் உடற்கூற்று பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. (ம-4-இ)

## 7ஆம் மாடியிலிருந்து வீழ்ந்த முதியவர் சாவு!

கொழும்பு, ஜன. 17

வெள்ளவத்தை தொடர்மாடியொன்றின் 7ஆம் மாடியிலிருந்து வீழ்ந்த முதியவர் உயிரிழந்துள்ளார்.

களுபோவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர், அவர் உயிரிழந்தார் என்று வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் வெள்ளவத்தையைச் சேர்ந்த 87 வயதுடையவர். முதியவர் உளநலப் பாதிப்பால் இவ்வாறு தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என்று ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. (ம-4-இ)

## சிறைக்குள் பொதி விசாரணை ஆரம்பம்



கொழும்பு, ஜன. 17

மாத்தறை சிறைச்சாலைக்குள் சுவருக்கு மேல் வீசப்பட்ட பொதி தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நில்வல கங்கைக்கு படகுமூலம் வந்து, சிறைச்சாலையை அண்டிய ஹொட்டல் வளாகத்தில் இருந்து சிறைச்சாலைக்குள் பொதி ஒன்று வீசப்பட்டுள்ளது.

குறித்த பொதியிலிருந்து கையடக்கத் தொலைபேசி மற்றும் அதற்குப் பயன்படுத்தும் உபகரணங்கள், போதைப்பொருள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. சிறைச்சாலையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளால் பொதி மீட்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் ஆணையாளரும், பேச்சாளருமான சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். (ம-4-இ)

## தேவாலயத்தில் கைக்குண்டு மீட்பு பின்னணியில் பெரும் சூத்திரதாரி!

### பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியில், பெரும் சூத்திரதாரி உள்ளார் என்று பொது மக்கள் பாதுகாப்புப் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்தச் சம்பவம் நாட்டின் பாதுகாப்புப் படையினரை தர்மசங்கடத்தில் ஆழ்த்தும் ஒரு நாசகாரச் செயல். சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்கு வழங்க வேண்டிய தகவல்களை பொலிஸாருக்கு வழங்காமல் ஊடகங்களுக்கு வழங்குவதன்மூலம் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தலைமறைவாகியுள்ளனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வதற்கு இது தடையாக உள்ளது. பொலிஸாரின் மீதான நம்பிக்கையை குலைக்கும் வகையில் அறிக்கைகள் வெளியிடப்படுவதால் விசாரணைகளை முன்னெடுப்பதில் பெரும் பிரச்சினை ஏற்படும். அண்மையில் கொழும்பில் தனியார் மருத்துவமனைக் கழிவறையில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவத்துக்குப் பின்னாலும் பெரும் சூத்திரதாரி உள்ளார் - என்றார். (ம-4-இ)

## கொரோனா நெருக்கடி நிலைமையிலும் மக்களுக்குப் பல்வேறு நிவாரணங்கள்

### அரச தகவல் திணைக்களம் அறிக்கை

கொழும்பு, ஜன. 17

கொரோனா நெருக்கடி நிலைமைக்குப் பின்னர், மீண்டும் நாடு தலை நிமிர்ந்துள்ள நிலையில், அரசால் மக்களுக்கு பல நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர்கள் மற்றும் அரசுடன் ஒன்றிணைந்த நிறுவன ஊழியர்களுக்காக 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு ஜனவரி மாதம் தொடக்கம் வழங்கப்படுகின்றது. இந்தக் கொடுப்பனவு சம்பளம் ஆசிரியர்களுக்கும் கிடைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த 5 ஆயிரம் கொடுப்பனவு ஓய்வூதியக்காரர்களுக்கும் வழங்கப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

ஊனமுற்ற படையினருக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக ஒரு கிலோ நெல்லுக்கு 75 ரூபா நிவாரண விலையும், சமுர்த்திப் பயனாளிகளுக்கு ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவும், தோட்டத் தொழிலாளர்களுக்கு 15 கிலோ கோதுமை மா நிவாரணமாகவும் வழங்கப்படுவது பொதுமக்களுக்குக் கிடைத்த வெற்றியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் மனை உற்பத்தித் திட்டத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

அனைத்து மருந்து மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்காக இறக்குமதி வரி முழுமையாக நீக்கப்பட்டுள்ளது என்றும் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4-இ)

## தேவாலயத்தில் கைக்குண்டு பிரதான சந்தேகநபர் கைது

கொழும்பு, ஜன. 17

பொரளையிலுள்ள தேவாலயத்தில், கைக்குண்டை வைத்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.


எம்பிலிப்பிட்டிய, பனாமுரப் பிரதேசத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த கைக்குண்டை வைக்க அவருக்குப் பணம் வழங்கப்பட்டுள்ளது. பணத்தை வழங்கிய நபரைக் கைது செய்வதற்கான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த 11ஆம் திகதி குறித்த கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், கொழும்பு தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா குட்செட்வீதி ஸ்ரீ கருமாரியம்மன் கோவிலில், மாட்டுப்பொங்கல் விழா சிறப்பாக நேற்று முன்தினம் நடைபெற்றது. (ம-110)





# 102 பானைகளில் கிளிநொச்சியில் வடக்கு மாகாணப் பொங்கல் விழா!

**கிளிநொச்சி, ஜன. 17**


**கிளிநொச்சி, இரணைமடுக்குளத்தின் 102ஆவது ஆண்டை முன்னிட்டு, 102 பானைகளில் பொங்கல் நிகழ்வும், வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இணைந்து நடத்தும் வடமாகாண பொங்கல் நிகழ்வும் நேற்றுக்காலை 8.30 மணிக்கு இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றன.**


நிகழ்வில், இந்திய துணைத் தூதரகத்தின் பதில் தூதுவர், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் திருலிங்கநாதன், வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-ரி1-6)



நீர்வேலி செல்லக்கதிர்காமம் கோயிலில் பட்டிப் பொங்கல் விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. பிரம்மஸ்ரீ கு.தியாகராஜா குருக்களின் தலைமையில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வில், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் வட்டார உறுப்பினர் இராசேந்திரம் செல்வராஜா, கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள், கால்நடைகளை வளர்ப்போர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-ரி1)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் தமிழர் திருநாளாம் தைத்திருநாளை முன்னிட்டு, காங்கேசன்துறைப் பகுதியில் பட்டத்திருவிழா முன்னெடுக்கப்பட்டது. பல போட்டியாளர்கள் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டனர். ஏராளமான மக்கள் குறித்த பட்டத் திருவிழாவைக் கண்டு ரசித்தனர். (ம-125)







கிளிநொச்சி பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில், தமிழர் கலாசார முறைப்படி நேற்று முன்தினம் பொங்கல்விழா இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு பொறுப்பாகவுள்ள பிரதி பொலிஸ்மா அதிபர், பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ம-ரி1-6)

# இராணுவப் பிரசன்னத்துடன் அராலியில் பட்டிப்பொங்கல்

யாழ்ப்பாணம், ஜன.17

அராலி, ஆவரம்பிட்டி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் பட்டிப் பொங்கல் கொண்டாடப்பட்ட நிலையில், நிகழ்வில் இராணுவத்தினரே முதன்மைப்படுத்தப்பட்டிருந்தனர் என்று அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நல்லூரில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த பொங்கல் விழாவில் கண்டிய நடனம் இடம்பெற்றமை மக்கள் மத்தியில் விசனத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியிருந்த நிலையில், நேற்று முந்தினம் இராணுவத்தினரை முதன்மைப்படுத்தி பட்டிப் பொங்கல் நிகழ்வும் நடத்தப்பட்டுள்ளது.

பட்டிப்பொங்கல் நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் டி.ஜி.எஸ்.செனரத் யாப்பா கலந்துகொண்டார். கட்டளைத் தளபதியும், விருந்தினர்களும், ஆலய முன்றிலில் அமைக்கப்பட்டிருந்த பொங்கல் திடலில் பொங்கல் பானையில் அரிசியிட்டு நிகழ்வை ஆரம்பித்தனர்.

அதன்பின்னர் கட்டளைத் தளபதி ஏர் பூட்டி நிலத்தை உழுதுடன், ஆலய வெளிவீதியில் மாட்டுவண்டிச் சவாரியிலும் ஈடுபட்டார்.

நிகழ்வில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய மாணவர்களின் பண்ணிசை நிகழ்வும், இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்களின் இசை நிகழ்வும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட கட்டளைத் தளபதி, வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் குணதிலக, யாழ். மாவட்ட விசேட அதிரடிப் படை அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள், சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



இந்த நிகழ்வை முன்னிட்டு, அந்தப் பகுதியில் பெருமளவான பாதுகாப்புத் தரப்பினர் குவிக்கப்பட்டு, பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மெல்லென நுழையும் பௌத்தம்...!

எந்தவொரு மதமும் வேண்டாமென்று துறவு பூண்டவர் கௌதம புத்தர். புத்தர் தன்னைக் கடவுளின் அவதாரமென்றோ, தேவதூதன் என்றோ சொல்லிக் கொண்டதில்லை. அற்புதங்களையும் நிகழ்த்தியதில்லை. அவர் ஒரு தத்துவப் போதனையாளராகவே இருந்தார். கடைசியில் அப்படிப்பட்ட புத்தரையே கடவுளாக்கி உருப்பெற்றதே பௌத்த மதம். எனவே ஏனைய மதங்களில் இருக்கும் முழுமையும், வழிபாட்டு முறைமைகளும் பௌத்தத்தில் குறைவு. எனவேதான் பிறமதங்களின் கூறுகளை மெல்ல மெல்ல தனதாக்கி, பௌத்தம் தன்னையொரு முழுமையான மதமாக மாற்ற முயற்சிக்கின்றது. அந்தவகையில் தான் பிறமதக் கடவுளர்களையும் பௌத்தமயமாக்கும் கைங்கரியத்தை நீண்ட நாள்களாகவே செய்துவருகின்றது. கதிர்காமக் கந்தனுக்கு நடந்த கதியை நாடே அறியும். இப்போது கதிர்காமத்தில் இருப்பது கந்தனல்ல, 'கதிர்காமத் தெய்யோ'. 'ஐயோ !, இதென்ன முருகனுக்கு வந்த சோதனை?'என்று இந்துக்கள் புலம்பினாலும், இனிமேல் கதிர்காமத்தானை பௌத்தத்தில் இருந்து மீட்கமுடியாதென்பதே உண்மை.

கடவுளர்களை எப்படி பௌத்தத்துக்கு 'மதம் மாற்றினார்களோ' அதேபோன்ற உத்தியைப் பிரயோகித்து தமிழர்களின் பண்டிகைகளையும் 'மதம் மாற்ற' பேரினவாதிகள் முனைகின்றார்களோ என்ற அச்சத்தை தைப்பொங்கலையொட்டி நடந்த சில சம்பவங்கள் எழுப்புகின்றன. ஒவ்வொரு தைப்பொங்கல் தினத்தன்றும், வல்வெட்டித்துறையில் 'பட்டத் திருவிழா' கோலாகலமாக நடந்துவந்தது. ஆனால், இந்தமுறை அந்தப் பட்டத் திருவிழாவை விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையோடு, 'சர்வதேசப் பட்டத்திருவிழா ' என்ற பேரில் நடத்தப் போகிறோம் என அறிவித்தார் அமைச்சர் நாமல் ராஜபக்ச. அவ்வளவுதான், பட்டத்திருவிழாவை இம்முறை நடத்தவே வேண்டாம் என்று ஊர்மக்கள் முடிவெடுத்தனர். அதனால் இம்முறை பட்டத்திருவிழா கொரோனாவைக் காரணம் காட்டி நிறுத்தப்பட்டது. ஆனால், அது நிறுத்தப்பட்டமைக்கான உண்மைக்காரணம் , நாமலின் தலையீட்டால் எழுந்த எதிர்ப்புகள் என்பது வெள்ளிடைமலை.

அத்தோடு அவர்கள் ஓய்ந்துவிடவில்லை. இந்தத் தைப் பொங்கலன்று நல்லூரிலும் ஒரு பொங்கல்விழா நடைபெற்றது. அந்தப் பொங்கல் விழாவில் தமிழர்களின் பாரம்பரிய கரகம், பொம்மலாட்டம் போன்றவற்றோடு கண்டிய நடனமும் கைகோர்த்தது. இப்படித்தான் ஆரியகுளத் திறப்பு விழாவிலும் திடீரென கண்டிய நடனக்காரர்களை ஆடவிட்டு, குழப்பத்தை நாகவிகாராதிபதி உண்டாக்கியிருந்தார். அதேபோன்றே தைப்பொங்கல் விழாவிலும் அதே நாகவிகாராதிபதியே கண்டிய நடனத்தை அரங்கேற்றுவதில் பின்புலமாக இருந்துள்ளார். பொங்கலுக்கு அடுத்த நாள் நடைபெறும் பட்டிப்பொங்கலையும் படைத்தரப்பு விட்டு வைக்கவில்லை. அராலியில் நடந்த பட்டிப்பொங்கலில் ஏர் எடுத்து உழுது, பசுக்களுக்கு பொங்கலிட்டு கொண்டாடி மகிழ்ந்துள்ளனர் படையதிகாரிகள். இத்தகைய நடவடிக்கைகள் போகப்போக இன்னும் விரிவடையும். அடுத்தடுத்த வருடங்களில், புத்தர் ஞானம் பெற்றபோது, அவர் பொங்கலிட்டு வணங்கிய நிகழ்வே தைப்பொங்கல் என்ற புனைவை மகாவம்சத்துக்குள் திணித்து, அதுவொரு பௌத்தப் பண்டிகை என்று சொன்னாலும் சொல்லக் கூடும்.

தமிழர்களின் பாரம்பரிய நிகழ்வுகள் நடக்கும்போது எதற்காக பௌத்த அடையாளங்கள் புகுவதற்கு அனுமதிக்க வேண்டும். ஒருவேளை நாகவிகாரதிபதியின் அனுசரணை தேவையென்றாலே, அல்லது படையதிகாரிகளின் நட்பு வேண்டுமென்றாலோ வேறுவகைகளில் 'காக்கா' பிடியுங்களேன். எதற்காக அவர்களையும், பௌத்த அடையாளங்களையும் எங்கள் பண்டிகைக்குள் கொண்டுவந்து உட்புகுத்த நினைக்கிறீர்கள்? என்றெல்லாம் தமிழ் மக்களிடையே கொந்தளிப்புகள் உருவாகத் தொடங்கியுள்ளன. 'ஊருக்குள் நரி சும்மா வந்தாலே சிக்கல்தான், அதற்குள் ஊளையிட்டுக்கொண்டும் வருகிறதென்றால்' நாம் தானே அவதானமாக இருக்கவேண்டும். பண்டிகைகளும், கலாசாரங்களும்கூட நம் உரிமைக்கான ஆயுதங்களே. அவற்றையாவது மௌனிக்கச் செய்யாது காப்பது நம் அனைவரதும் கடமை....!

### நாளொரு நல்வார்த்தை

"உலகில் நீங்கள் விரும்பும் மாற்றம் உங்களிடமிருந்தே தொடங்கட்டும்"

-மகாத்மா காந்தி




# ரணில் பதிலளித்திருந்தால் புலிகளின் முடிவு மாறியிருக்கும்

## சிவாஜிலிங்கம் பதிலடி

**யாழ்ப்பாணம், ஜன. 17**

**ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு தடவைகளும், தான் தோற்கடிக்கப்பட விடுதலைப் புலிகள்தான் காரணம் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ஆனால், புலிகளின் கடிதத்துக்குப் பதிலளித்திருந்தால் புலிகளின் முடிவு வேறாக இருந்திருக்கும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.**

அவரது கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

'இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றிப் பேசுவதற்குத் தயார் என்ற வாக்குறுதியை தரத் தயாரா'? என்ற கேள்வியுடன் அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்கச் சென்றிருந்தேன். ஆனால் பதில் கிடைக்கவில்லை. நான் மீண்டும் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் சென்று, எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்று தெரிவித்திருந்தேன். சாதகமான பதில் கிடைத்திருந்தால், பகிஷ்கரிப்புத் திட்டத்தை மீளப்பெறுவோம் என்றும் விரும்பிய வர்களுக்கு மக்கள் வாக்களிக்கலாம் என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவித்திருந்தார். ரணில் கண்டுகொள்ளாததால்தான், 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் தமிழ் மக்களால் புறக்கணிக்கப்பட்டது. ரணில் தோல்வியடைந்தார். யாழ்ப்பாணத்தின் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாக்களிக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்கவை, பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் சந்தித்தபொழுது, நான் அனுப்பிய செய்தி உங்களுக்குக் கிடைத்ததா என்று கேட்டேன். அப்போது ரணில் விக்கிரமசிங்க, 'அந்தச் செய்தி கிடைத்தது. ஆனாலும், கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம, எவ்வாறான பதிலும் அனுப்பத் தேவையில்லை என தெரிவித்திருந்தார். அதனால் தவிர்த்துக் கொண்டேன். ஆனால், அனுப்பியிருக்கலாம் என்று இப்பொழுது நினைக்கின்றேன்' என்று கூறியிருந்தார் - என்றார்.

(கு-27)

# மாகாணத் தேர்தல் ஒத்திவைப்பு நாட்டு நிலைமையே காரணம்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 17

நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாகவே, மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் தேர்தல்கள் நடைபெற்றால், மக்கள் பல கேள்விகளைக் கேட்பார்கள். அரசு நாட்டில் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும். தேர்தல்கள் தாமதாவது இது முதல் தடவையல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ம-4-இ)

நாளை 18.01.2022 செவ்வாய்க்கிழமை
சுபநேரம் : 11.05 - 12.35
ராகுகாலம் : 03.35 - 05.05
தை - 04 தைப்பூசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதனத்தை நோக்கிய பயணத்தில்

# மண்புழு உரம்



சுஜாவந்தி இலட்சுமணகுமார்
*உதவி விரிவுரையாளர்,*
*விவசாய உயிரியல்துறை,*
*விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்*

மனித நாகரிகம் உருவாகியபோது உணவு மட்டுமே அடிப்படைத் தேவையாக இருந்ததினால் விவசாயத்தையே தாரகமந்திரமாகத் கொண்டு வாழ்ந்தனர். இன்று ஆடம்பரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நாம் எமது மண்வளத்தையும் இயற்கை வளத்தினையும் பேணிக்காக்கும்பொருட்டு சேதன விவசாயத்தினை மேற்கொள்ளுவது காலத்தின் கட்டாயமாக அமைகிறது. இயற்கை வேளாண்மையில் இரசாயன உரங்கள், பூச்சி நாசினிகள் போன்ற சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் உள்ளீடுகளை குறைத்து (முடியுமானவரை தவிர்த்து) இயற்கை உள்ளீடுகளை அதிகமாகப் பயன்படுத்தி வேளாண் நடவடிக்கையில் ஈடுபடுவதால் மனித இனத்தின் ஆரோக்கியமான இருப்பினை உறுதிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

மண்ணானது விவசாயத்தின் அத்திபாரம். அத்திவாரம் உறுதியாக இருந்தால் மட்டுமே மேற்கொண்டு செய்யும் செயற்பாடுகள் பிரயோசனமாக இருக்கும். மண்ணில் போதிய போசணைப் பதார்த்தங்கள் இருக்கும் சந்தர்ப்பத்தில் விவசாயத்தின்மூலம் கிடைக்கும் விளைச்சல் அளப்பரியது. தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த 'ஜகத்தினை அழித்திடுவோம்' என்ற பாரதியார் சொல்லுக்கு இணங்க, அதிகரித்துவரும் சனத்தொகைப் பெருக்கத்துக்கு உணவு உற்பத்தி செய்ய வேண்டியது அவசியம். ஆயினும் கொரோனாவின் தாக்கத்தால் உருவான உள்நாட்டு விவசாய உற்பத்திக்கான தேவைப்பாடும், அசேதன இராசயனங்களால் ஏற்படும் பாதிப்பைக்குறைக்க அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பான கட்டுப்பாட்டுச் சட்டத்தின் காரணமாகவும் விவசாயிகள் சேதனப்பசளை நோக்கி அடியெடுக்க தொடங்கினர். அந்த வகையில் சூழலுக்கும் உயிரங்கிகளுக்கும் பாதிப்பு இல்லாத விளைச்சல் அதிகரிக்கக் கூடிய மண்புழு உரம் ஒரு தீர்வு ஆகும்.

**மண்புழு என்பது யாது?**

மண்புழு எனப்படுவது மண்ணில்வாழும் அந்நெலிடாக்கள் ஆகும். மண்புழுவை பொதுவாக உழவனின் நண்பன் என்போம். இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களிடம் ஒரு கேள்வி எழ வாய்ப்பு உண்டு. எமது வீட்டு சூழலில் உள்ள மண்புழுக்களை கொண்டு உரம் தயாரிக்கலாமா? என்பதே அந்த அந்தக்கேள்வியாக இருக்கும். ஆம், மண்புழுக்களை வாழும் சூழலுக்கு ஏற்ப மூன்றாக வகைப்படுத்தலாம்.

1. **எபிஜெனிக்** - மண் மேற்பரப்புக்கு அண்மையில் வாழும் தாவரக் கழிவுகள் மற்றும் உக்கிய சேதனக் கழிவுகளை உணவாக உட்கொள்ளும்.
2. **எண்டோஜெய்க்** - மண்ணின் மேற்பரப்புக்கு 20 சென்ரிமீற்றர் ஆழத்தில் வாழ்வன. அதிகளவில் மண் மற்றும் சேதனக் கழிவுகளை உள்ளெடுக்கும்.
3. **அனீஸிக்ம்** - மண் மேற்பரப்புக்குகீழ் 3மீற்றர் ஆழத்தில் வாழக்கூடியன.

இவற்றுள் மண் மேற்பரப்புக்கு அண்மையில் வாழும் சேதனக் கழிவுகளை உக்கலடைய செய்யக்கூடிய எ.பி. ஜெனிக் மண்புழுக்கள் உரம் தயாரிக்கப் பங்களிக்கின்றன. இவை உக்கலடையக்கூடிய சேதனக் கழிவுகளை உணவாக உட்கொண்டு கழிவை வெளியேற்றிடக்கூடியன. இந்தக் கழிவே 'கறுப்புத் தங்கம்' எனப்படும் மண்புழு உரமாகும்.

**'கறுப்புத் தங்கம்' என்று ஏன் அழைக்கிறோம்?**

1. மண்புழு உரத்தில் நைதரசன், பொட்டாசியம், கல்சியம், மங்கனீசு, பொஸ்பரசு மற்றும் நுண் மூலகங்கள் அடங்கியுள்ளன. இதில் நைதரசனானது 5 மடங்கும், பொட்டாசியமானது 7 மடங்கும், கல்சியமானது 1 1/2 மடங்கும் அதிகமாக உள்ளன.
2. மண்புழு உரத்தில் தாவர வளர்ச்சியையும் விருத்தியையும் தூண்டும் வளர்ச்சி ஓமோன்களாக ஒட்சிசன், சைட்டோகினின் உள்ளன.
3. மண்புழு உரமானது தாவர விளைச்சல் அளவையும், அதன் ஆயுட் காலத்தையும் கூட்டுகிறது.
4. மண்ணின் காற்றோட்டம், நுண்துளைத் தன்மை, கட்டமைப்பு, வடிகாலமைப்பு, நீர் பிடிப்பு ஆற்றலை அதிகரிக்கிறது.
5. மண்ணரிப்பைத் தடுப்பதன்மூலம் மூலத்தாதுக்களின் இழப்பையும் குறைகிறது.
6. மண்புழுவுக்கு உணவாக சேதனக் கழிவுகளை வழங்குவதால் சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருக்க முடியும்.
7. மண்புழு உரம் நஞ்சு விளைவிக்கும் மூலகங்களோ விதைகளோ அற்றது.

கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது வளர்ந்து வரும் தொழில் முயற்சியாக மண்புழு உற்பத்தியுடன் கூடிய மண்புழு உரத் தயாரிப்பு அமைந்துள்ளது. விவசாயிகளுக்கும் வியாபார நோக்கம் கொண்டவர்களுக்கும் மண்புழு உரம் உற்பத்தி செய்ய ஆர்வம் இருந்தாலும் எப்படி தயாரிப்பது பற்றி தெளிவூட்டல் தேவைப்படுகிறது.

**மண்புழு உரம் தயாரிக்க தேவையான பொருள்கள்**

1. **மூலப்பொருள்கள்:** இலை, குப்பைகள், சமையல் கழிவுகள், அறுவடையின் பின்வரும் பயிர்க் கழிவுகள், வேளாண் தொழிலிருந்து வரும் கழிவுகள், கிராம நகர்ப்புற மக்கும் கழிவுகள், பருப்பு மற்றும் பருப்பு அல்லாத பயிர் எச்சங்களின் கலவைகள் மண்புழு உரத்தின் தரத்தை உயர்த்துகின்றன. இதில் நாம் ஒரு விடயத்தை சிறப்பாகப் புரிந்து கொள்ளவேண்டும். அதாவது தெரிவு செய்யும் மூலப்பொருள் மண்புழுவுக்கு எந்தத் தீங்கும் விளைவிக்காததாக அமைய வேண்டும். உதாரணமாக, சமையல் கழிவுகளான வெங்காயம் மற்றும் உள்ளி மணம் மண்புழுவின் செயற்பாட்டை பாதிக்கும். தேசிக்காயின் அமிலத்தன்மை மென்மையான மண்புழுவின் உடலில் பாதிப்பினை ஏற்படுத்தும் இவ்வகையான கழிவுகளை மூலப்பொருளாக பயன்படுத்துவதைத் தவிர்த்தல் சிறப்பு.



2. **பொருத்தமான மண்புழு:** தெரிவுசெய்யும் மண்புழு இனமானது அதிஉயர் வீதத்தில் கழிவு வெளிவிடக் கூடியதாகவும், இலகுவில் பெருக்கமடையும் ஆற்றல் கொண்டதாகவும், மூலப்பொருளுடன் கூடிய இணக்கம் கொண்டதாகவும் இருத்தல் நல்லம்.
3. **தொடங்கி:** உரத்தயாரிப்பின் ஆரம்பமாக்கியாக பசுச்சாணம், உயிர்வாயுக் குழம்பு, கால்நடைகளின் சிறுநீர் என்பனவற்றைப் பாவிக்கலாம்.
4. **கொள்கலன்கள்:** மரப்பெட்டிகள், பிளாஸ்ரிக் கொள்கலன்களைப் பயன்படுத்தலாம். அதிகப்படியான நீரை வெளியேற்ற அடிப்பாகத்தில் துவாரம் இடல் வேண்டும். தேவைக்கு ஏற்ப சிமெந்துத் தொட்டி கட்டலாம். தொட்டியின் அடிப்பாகம் சரிவாக இருந்தால் மேலதிக நீரை வெளியேற்ற இலகுவானதாக அமையும்.
5. **இடத்தெரிவு:** நிழல், மற்றும் குளிர்ச்சி கொண்ட எந்த இடத்திலும் உரம் தயாரிக்கலாம். நேரடி சூரிய ஒளி, மழை மற்றும் பிற சூறையாடும் உயிரினங்களிலிருந்து பாதுகாக்க கூரை விரும்பத்தக்கது.

மண்புழு உரமானது பல முறைகளில் தயாரிக்கலாம். அதாவது குழிமுறை, குவிமுறை, தொட்டி முறை மற்றும் படுக்கை முறை. அவற்றுள் படுக்கை மற்றும் குழி முறைகள் பொதுவானவை.

இங்கு நாம் இலகுகரமாக குழி முறை மூலம் விவசாயிகள் எவ்வாறு மண்புழு உரம் தயாரிக்கலாம் என்று பார்ப்போம். சிமெந்துக் குழிகள், மரப்பெட்டிகள், பிளாஸ்டிக் வாளிகள் போன்றவற்றில் மண்புழு உரம் தயாரிக்க முடியும்.

**செய்முறை**

1. இதற்காக ஒரு மீற்றர் நீளம், ஒரு மீற்றர் அகலம் இரண்டு மீற்றர் ஆழம் கொண்ட குழி அமைக்க வேண்டும். தேவைக்கு ஏற்ப குழியின் நீள, அகலம் வேறுபடலாம். ஆயினும் குழியின் ஆழம் இரண்டு மீற்றர்களில் இருப்பது விரும்பத்தக்கது.
2. குழியின் ஆழத்தில் உடைந்த செங்கல் துண்டுகள், மட்பாண்ட துண்டுகளால் பரவி விடுவதன் மூலம் நீர் வழிந்தோடும் தன்மையை அதிகரிக்க முடியும்.
3. மூலப்பொருள்கழிவுகளை சேகரித்தல் (உலோகம், கண்ணாடி, பீங்கான் துண்டுகளை பிரித்தகற்றல்)
4. செங்கல் துண்டுகளின் மேல் உமி மற்றும் காய்ந்த இலைகளை 2.5 சென்ரிமீற்றர் தடிப்பில் பரவி விட முடியும்.
5. மாட்டுச் சாணத்தை காய்ந்த இலைகள் மேல் பரவுவதன் மூலம் ஏறக்குறைய 20 நாள்களில் முன் செரிமானம் அடைந்த சேதனக் கழிவுகளைப் பெற முடியும். இது மண்புழு நுகர்வை இலகுவாக்குவதால் விளைச்சலை விரைவாக பெறலாம்.
6. புழுக்களை (ஏறத்தாழ 400-450 மண்புழுக்கள்) 2 மீற்றர் குழியில் விடுவித்தால், மண்புழு எண்ணிக்கைக்கு ஏற்ப உரம் தயாரிக்க எடுக்கும் காலம் மாறுபடலாம். அதிக மண்புழுக்களை விடுவித்தால் வெகு சீக்கிரம் அறுவடை கையில் இருக்கும்.

45 - 60 நாள்களின் பின்னர் கறுப்புத் தங்கம் குழியின் மேற்பரப்பில் தென்படும். மேல்குறிப்பிடப்பட்ட படிமுறைகளின்படி மண்புழு விடுவிக்க முன்னர் மாட்டு சிறுநீர் விசிறி விடுவோமேயானால் விளைச்சலாக கிடைக்கும் உரத்தில் நைதரசன் அளவு கூடவாகவும் எதிர்பார்த்த நாள்களைவிட பத்து நாள்கள் முன்னராகவும் அறுவடை எடுக்க முடியும். விளைச்சல் எடுப்பதற்கு ஐந்து நாள்களுக்கு முன்னர் நீர் பாய்ச்சுவது நிறுத்தப்பட வேண்டும். மண்புழுக்கள் மேலிருந்து கீழ்நோக்கி சேதனக் கழிவுகளை உட்கொண்டு கழிவை வெளியேற்றும். ஆகவே மண்புழுக்கள் அடிப்பாகத்தில் இருப்பதால், மண்புழு தெரியும் அளவு வரை கைகளால் மேற்பரப்பில் உள்ள கறுப்பு சிறுதுகள்களை எடுக்கலாம். இல்லையேல் புதிய மாட்டுச் சாணத்தை உருண்டைகளாக்கி உரத்தொட்டியில் இட்டால் மண்புழுக்கள் புதிய மாட்டுச் சாணம் நோக்கி படையெடுக்கும். அதன்பின்னர் இலகுவாக மண்புழு அற்ற உரத்தை பிரித்து எடுக்க முடியும். அறுவடை செய்யும்போது கீழே உள்ள அடுக்குகளுக்கு இடையூறு ஏற்படுத்தாமல் இருப்பது சாலச்சிறந்தது. தற்காலத்தில் சேதன விவசாயத்தில் பணிபுரியும் மக்கள்தொகை அதிகரித்து வருவதை அவதானிக்கமுடிகிறது. ஆயினும் மண்புழு உரப்பாவனை ஒப்பீட்டளவில் குறைவாக காணப்படுகிறது என்பது கண்கூடு. தன்னிறைவுப் பொருளாதாரத்தை நோக்கிய இலங்கையின் பயணம் உண்மையானால் அதற்கு மண்புழு உரம் ஒரு மைல்கல்லாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாருங்கள்!

12ம் யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

JITF 2022

ஜனவரி January 21 22 23

10.00 மு.ப - 8.00 பி.ப முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)

CONCURRENTLY WITH
Higher Education & Career Exhibition
KALVI JAFFNA 2022




MAIN SPONSOR: INSEE CEMENT
CO - SPONSOR: SLTMOBITEL The Connection
OFFICIAL PARTNERS: SAFETY & HYGIENE – SUN; FOOD – Ranunu; PRINT MEDIA – உதயன்; ELECTRONIC MEDIA – DAN

jitf.lk
www.jitf.lk

ORGANIZED BY: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH: CCIY
ENDORSED SUPPORTED BY: Ministry of Industries, Jaffna Municipal Council, Consulate General of India Jaffna, EDB Regional Export Development
PARTNER COUNTRY: India


# மரண அறிவித்தல்

தோற்றம்
27 . 04 . 1947

மறைவு
16 . 01 . 2022



## காராளசிங்கம் மேரிரீற்றா (பேபி)

புங்குடுதீவு 2 வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பாற்பண்ணைவீதி, திருநெல்வேலியை வசிப்பிட மாகவும் கொண்ட காராளசிங்கம் மேரிரீற்றா (பேபி) நேற்று (16.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காராளசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராஜா பிரான்ஸிஸ் சேவியர் - கெலன் ரெஜினா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ஜீவானந்தன் (HNB Assurance), அமரர் ஜெயந்தன், சுஜாதா (France), ஜெனிற்றா, அமரர் சஜிரேந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜீவலதா, ரமணதாஸ் (France), ஸ்ரீபன்ராஜ் (Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமரர் மேரிதிரேசா (ரஞ்சி), பிலோமினா (வவி - வைத்தியர், ஆலடி, உடையார்கட்டு), அமரர் அல்பிரட் எமிலியானுஸ் (துரையர் - வைத்தியர், புதுக்குடியிருப்பு), பீற்றர் சாள்ஸ் (பாலன் -France), அலோசியஸ் (செல்வன் -France), அசம்டா (ராணி -France) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் சேவியர், திருச்செல்வம் (BOC -Retired Manager), பிலோமினா பரமேஸ்வரி, அமரர் பத்மாவதி, ஜூலியா (France), பாக்கியராஜா (France) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுவிஷனா, மிதுர்ஷன், டிஷானி, சாளிகா (France), டிலக்சிகா (France), ஆதித்தன் (France), சாங்கவை, சதுர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.01.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு உடையார்கட்டு தெற்கு, கிறிஸ்து அரசர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கிறிஸ்து அரசர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

108, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

தகவல்: குடும்பத்தினர்
077 026 6239,
077 087 9427

(cs8425) (2.6)

# 9 ஆம் ஆண்டு நினைவலைகள்





## அமரர் செல்வி தனராஜா துளசிகா (துளசி)

அன்னை மடியில் 06.09.1990
ஆண்டவன் பாதத்தில் 26.01.2013

(கலைப்பீட 2 ஆம் வருட மாணவி யாழ். பல்கலைக்கழகம் - 2013)

திதி: பூரணை


ஆண்டுகள் ஒன்பது உருண்டோடிவிட
ஆறாத்துயரில் நாம் இங்கு தவிக்க
மீளாத்துயில் நீ கொள்வதேனம்மா
மதிநிறைந்த நாளில் மதிமுகம் காணாது
காலனவன் உன்னை
பாதியினியில் ஏன் கவர்ந்தான் என
விடை தெரியாது விழிநீர் சொரிகின்றோம்
சிவனடியில் உன் ஆத்மா
என்றும் சரணடையட்டும்

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

குடும்பத்தினர்
(தாய், தந்தை, சகோதரர்கள், மைத்துனிமார்)
45/ A3, ஞானவைரவர் லேன்,
பலாலி வீதி, கோண்டாவில்.

(cs 42272) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கானைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் நிதி ஒதுக்கீட்டில், வட்டுக்கோட்டை இளந்துளிர் விளையாட்டுக்கழகம், பறாளாய் விளையாட்டுக்கழகம், விவேகானந்தா விளையாட்டுக்கழகம் ஆகிய கழகங்களுக்கே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளருமான பா.கஜதீபன், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் இ.கௌதமன் ஆகியோர் கலந்துகொண்டு விளையாட்டு உபகரணங்களை வழங்கினர். (ம-ரி1-27)



ஓய்வுநிலை மருத்துவர் அருளானந்தத்தின், அமுதவிழாவை முன்னிட்டு, சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றின் வளர்ச்சிக்காக 25ஆயிரம் ரூபா நிதி அண்மையில் வழங்கப்பட்டது. (ம-4-159)



முல்லைத்தீவுமாவட்டம், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு ரூபன் முன்பள்ளி மற்றும் சிவநகர் திலக் முன்பள்ளி ஆகியவற்றில் கல்விபயிலும் சிறார்களின் குடும்பத்தினர் தைப்பொங்கல் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதற்கு பொங்கல் பொதிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (ம-115)



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரனின் நிதிஒதுக்கீட்டில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புதியநகர் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்துக்கு ஒலிபெருக்கிகள் வழங்கப்பட்டன. (ம-ரி1)



மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் நிதி அனுசரணையில் மன்னார் 'மெசிடோ' நிறுவனத்தின் இணைப்பாளர் யட்சன் பிகிராடோவின் ஏற்பாட்டில், வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பொருண்மியம் நலிந்த 200 குடும்பங்களுக்கு அண்மையில் நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-60)



நவாலி மகாவித்தியாலயத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்கள், பணியாளர்கள் நலன்புரி சங்கத்தினரால் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். (ம)



மட்டுவில் - சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவிக்கு புலம்பெயர் நாட்டில் வசிக்கும் வித்தியாலயத்தின் பழைய மாணவன் ப.இலங்கேஸ்வரனின் நிதிப் பங்களிப்பில் அண்மையில் துவிச்சக்கர வண்டி யொன்று கையளிக்கப்பட்டது. (ம-ரி1-9)



தமிழ் சைவப்பேரவையின் ஏற்பாட்டில், துர்க்கா அறநெறிப் பாடசாலை, தென்மதுரை மறுமலர்ச்சி மன்ற அறநெறிப் பாடசாலை, கவரவில கதிர்வேலாயுத சுவாமி அறநெறிப் பாடசாலை, இந்துமாமன்ற அறநெறிப் பாடசாலைகளுக்கு [illegible] உபகரணங்கள் வழங்கப்பட்டன. தமிழ் சைவப்பேரவை உறுப்பினர் [illegible] மற்றும் மலையக தென்மேல் சிவப்பிராந்திய ஒருங்கிணைப்பாளர் பி.தினேஸ்குமார் ஆகியோரது ஒருங்கிணைப்பில் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. (கு-ரி1-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளிருந்து விமர்சிப்பது பெரும் அரசியல் தவறு!

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு



**கொழும்பு, ஜன.17**

**அரசாங்கத்துக்குள் இருந்துகொண்டு அரசாங்கத்தை விமர்சிப்பது மிகப்பெரிய அரசியல்தவறு என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கத்தில் இருந்து வெளியேறி அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு கதவுகள் திறந்தே உள்ளன. அரசாங்கத்தில் இருந்துகொண்டு அரசாங்கத்தை விமர்சிப்பது மேல் நோக்கிப் பார்த்து எச்சில் உமிழ்வதைப்போன்றது. ஊடகங்கள் மூலம் நடத்தப்படும் அரசியலுக்கு ஆயுள் குறைவு. நான் 50 வருடங்களாக அரசியலில் அனுபவங்களைப் பெற்றுள்ளேன். எனினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசியல் கொள்கைகளில் இருந்து விலகிச்சென்றதில்லை - என்றார். (எ-இ)

# பனைமரக் குற்றிகள் கடத்தலுடன் அதிகாரிகளுக்குத் தொடர்பில்லை

## வேலணைப் பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.17

புங்குடுதீவில் இருந்து சட்டவிரோதமாக எடுத்துச் செல்லப்பட்ட பனை மரக் குற்றிகளுக்கும், பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது என்று வேலணைப் பிரதேச செயலர் எஸ்.சிரிதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

புங்குடுதீவில் எடுத்துச் செல்லப்பட்ட சீவிய பனை மரங்களுடன் லொறி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. புங்குடுதீவிலிருந்து 9 பனைமரங்களில் சீவிய 55 மரத்துண்டுகளை ஏற்றுவதற்கான அனுமதி பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக பல பனைமரத் துண்டுகள் ஏற்றப்பட்ட நிலையில் பொலிஸாரால் சோதனையிடப்பட்டு வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது.

பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம அலுவலருக்கு இந்த விடயங்களுடன் தொடர்புள்ளது என்று சில உண்மைக்குப் புறம்பான தகவல்கள் வெளியாகியுள்ளன. பனை மரம் ஏற்றிச் செல்வதற்கும் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் நிர்வாக ரீதியாக எந்த விதத் தொடர்பும் இல்லை. இந்தச் சம்பவம் தொடர்பான விவரங்கள் பொலிஸ் விசாரணையில் தெரியவரும் - என்றார். (எ-20)

# நாட்டைக் கட்டியெழுப்ப ஒற்றுமைப் படையணி

கொழும்பு, ஜன.17

பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கின்ற எமது நாட்டை மீட்டெடுப்பதற்கான சக்தி இளைஞர்களிடம் மாத்திரமே காணப்படுகின்றது. நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காக இளைஞர்களை ஒன்று திரட்டும் நோக்கில் எமது கட்சியின் ஊடாக ஐக்கிய ஒற்றுமைப் படையணி நிறுவப்பட்டுள்ளது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய ஒற்றுமைப் படையணியின் அலுவலகத்தை கடந்த வெள்ளிக்கிழமை திறந்த எதிர்க்கட்சித் தலைவர், அதன்பின்னர் எதுல்கோட்டையில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா வைரஸ் பரவல் காரணமாகவும், தற்போதைய அரசாங்கத்தின் செயற்றிறனற்ற நிர்வாகத்தாலும் இப்போது எமது நாடு பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளது. இந்த நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்டெடுத்து, அதனை மீளக் கட்டியெழுப்புவதற்கான இயலுமை இளைஞர்களிடம் மாத்திரமே காணப்படுகின்றது.

நாட்டின் மீட்சியை இலக்காகக் கொண்டு இளைஞர்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டும் நோக்கில் எமது கட்சியின் ஊடாக ஐக்கிய ஒற்றுமைப்படையணி என்ற கட்டமைப்பை நிறுவியிருக்கின்றோம். அதன் தலைவராக நாடாளுமன்றஉறுப்பினர்ஹேஷா விதானகேவும் செயலாளராக சமிந்த விஜேசிறியும் நியமிக்கப்பட்டுள்ளனர்-என்றார். (எ-இ)

# ஏ-14 வீதிச் சீரமைப்பில் திருப்தியற்ற நிலைமை

## பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

மன்னார், ஜன.17

தலைமன்னார் ஏ-14 பிரதான வீதி, சரியானமுறையில் திட்டமிடப்பட்டுச் சீரமைக்கப்படாமையால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மன்னார் பிரஜைகள் குழுவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, மன்னார் பிரஜைகள்குழு அந்த இடத்துக்குச் சென்று கள ஆய்வை மேற்கொண்டது.

ஏ-14 வீதி அகலிக்கப்பட்டுத் தற்போது வீதிச்சீரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இந்த வீதி 'ஏ' தரத்தைக் கொண்டுள்ள போதும், வீதிச்சீரமைப்பு நடவடிக்கைகள் 'பி' தரத்தைக் கொண்ட வீதியைச் சீரமைப்பது போன்றே நடக்கின்றன என மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த வீதி ஏற்கனவே இருந்த வீதியை விடவும் உயரமாக்கப்பட்டு, சீரமைப்புச் செய்யப்படுகின்றது என்றும், வீதியின் இரு மருங்கும் தடுப்புக்கள் இல்லாததால் எதிர்காலத்தில் விபத்துக்கள் ஏற்படலாம் என்றும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

இதுதொடர்பில்நேரில் சென்று பார்வையிட்ட மன்னார் பிரஜைகள் குழுவினர் தெரிவித்தபோது, மக்கள் தெரிவிக்கும் விடயங்களில் உண்மை இருக்கின்றது. முக்கியமான இடங்களில் வீதி விளக்குகள் இல்லை. இது தொடர்பாக சில உயர் அதிகாரிகளை அழைத்துச் சென்று காட்டியபோதும் அவர்கள் பொறுப்புக்கூற முடியாத நிலையில் இருக்கின்றனர். மழை நீர் வடிந்தோடுவதற்குரிய சரியான வடிவமைப்புக்கள் இல்லை. இது தொடர்பாக எவரிடம் முறையீடு செய்வது என்பது எமக்குத் தெளிவில்லாத தன்மையே காணப்படுகின்றது என்று தெரிவித்தனர்.



சம்பந்தப்பட்ட தரப்புக்கள் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-60)

# துறைமுகத்தில் காத்திருக்கும் கொள்கலன்கள்

கொழும்பு, ஜன.17

அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய சுமார் ஆயிரத்து 700 கொள்கலன்கள் இரண்டு மாதங்களுக்கும் மேலாகக் கொழும்புத் துறைமுகத்தில் தேங்கியுள்ளன என்று அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியால், வணிக வங்கிகளுக்கு டொலரை விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதமே இதற்குக் காரணம் என அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தப்பட்டபோதிலும், இதுவரையில் உரிய தீர்வு கிடைக்கவில்லை என்று அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்தார். (எ-இ)

# கோப் சிற்றி திறப்பு விழா

சாவகச்சேரி, ஜன.17

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மற்றொரு மினி கோப்சிற்றி சரசாலை வடக்கில் எதிர்வரும் 19ஆம் திகதி திறக்கப்படவுள்ளது. சங்கத்தின் 13ஆம் இலக்கக் கிளையான சரசாலை வடக்கு கிளையே மினி கோப் சிற்றியாக மாற்றப்பட்டுள்ளது.

சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் புதிய மினி கோப் சிற்றியை திறக்கவுள்ளார்.

வடமாகாணத்தில் கூட்டுறவுத் துறையை வினைத்திறனாக்குவதற்கும், வியாபாரக் கூடங்களை விருத்தியடையச் செய்வதற்கும் 15 புதிய மினி கோப் சிற்றிகளைத் திறக்க மாகாண கூட்டுறவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (எ-9)

# பிரிவுபசார விழா

சாவகச்சேரி, ஜன.17

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றி, இடமாற்றம் பெற்றுச்சென்ற மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற அலுவலர்களுக்கான பிரிவுபசார விழா நாளை மறுதினம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் பிரிவுபசாரவிழா நடைபெறவுள்ளது. 2020, 2021 ஆகிய காலப்பகுதியில் இடமாற்றலாகியும், இளைப்பாறியும் சென்ற அலுவலர்களுக்கு இந்த நிகழ்வு நடத்தப்படுகின்றது. (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் ராசிபலன்

**மேடம்:** குடும்பத்தினர் உங்கள் மீது அதிகமாக அன்பு, பாசம் காட்டுவர். தொழில் வளர்ச்சிகூடும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தினர் இடையே அன்பும், அரவணைப்பும் அதிகரிக்கும்.

**இடபம்:** செய்ய நினைத்ததை குறித்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நீங்கள் தீட்டிய திட்டங்கள் நிறைவு பெறும். பல நாளாக செய்ய நினைத்த ஒரு செயலை முடிப்பீர்கள்.

**மிதுனம்:** நேர்மறை சிந்தனைகள் காரணமாக மனம் தெளிவாகும். பகை மறந்து செயற்படுவீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். மற்றவர்களை வென்று முன்னேறும் துணிச்சல் வரும்.

**கடகம்:** விரயங்கள் கூடும். விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. எதையும் ஒன்றுக்கு இரண்டு முறை செய்த பிறகே சரியாக வரும். ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு செயற்பட்டால் அமைதி உண்டு.

**சிம்மம்:** தடைப்பட்டு வந்த விடயம் கடைசிநேரத்தில் கைகூடிவிடும். சுபச்செலவுகள்உண்டு. குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பயன்மிக்க புதுப்பொருள் ஒன்றை வாங்கி மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கன்னி:** மறதி காரணமாக சிறு சிறு தொல்லைகளைச் சந்திப்பீர்கள். முன்னேற்றத்துக்கான முயற்சி சற்றே தாமதமாகப் பலன் தரும். மன உறுதியால் நினைத்த விஷயத்தை செய்து முடிப்பீர்கள்.

**துலாம்:** சாதுரியமாகச் செயற்பட்டு அக்கம்பக்கத்தினரிடம் பாராட்டு பெறுவீர்கள். பெரியவர்களின் விருப்பத்தை நிறைவேற்றி அவர்களது அன்பை பெறுவீர்கள். பணியிடத்தில் இருந்த தொல்லை தீரும். சுபச்செலவு உண்டு.

**விருச்சிகம்:** கடந்த இரண்டு நாள்களை விட மனதில் தெளிவுகூடும். எதையும் நன்கு யோசித்த பிறகு செய்வது நல்லது. கவனமாக எதையும் செய்வோருக்கு நன்மை உண்டு. சக வியாபாரிகள் அனுசரணையாக நடந்துகொள்வர்.

**தனுசு:** மற்றவர் மனதைப் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது. நீங்கள் நடந்து கொள்வதைப் பொறுத்து தாயின் ஆதரவு இருக்கும். உங்களின் நிதானப்போக்கால் வேலைப்பளு அதிகரிக்கும்.

**மகரம்:** உடல் ஆரோக்கியத்தில் இருந்து வந்த பிரச்சினைதீரும். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். ஆரோக்கியம் சிறக்கும். மனதில் தன்னம்பிக்கை கூடும். உடன்பிறந்தோர் உறு துணையாக இருப்பர்.


**கும்பம்:** குழந்தைகளுக்கு உங்கள் மீது பாசமும், நேசமும் அதிகரிக்கும். நீண்ட நாளைய கனவுகளை இன்று நனவாக்கிக் கொள்வீர்கள். நண்பர்களுக்கு உதவி செய்து அவர்களை நெகிழ வைப்பீர்கள்.

**மீனம்:** புதிய வாகனம் வாங்கும் முயற்சி இன்று நிறைவேறும். மேலதிகாரிகள் உங்கள் திறமைக்குத் தக்க உயர்வு தருவர். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய முயற்சி வெற்றி தரும்.

*உக்ரைன் மீது படையெடுப்பதற்காக*

# சொந்தப் படைகளையே தாக்க ரஷ்யா திட்டம்?

## அமெரிக்கா குற்றச்சாட்டு



**வொஷிங்டன், ஜன. 17**

**உக்ரைன் மீது படையெடுப்பதற்காக, ரஷ்யா தனது சொந்தப் படைகள் மீது தானே தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளது என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.**

உக்ரைன் எல்லையில் ரஷ்யா, பல்லாயிரம் இராணுவத்தினரைக் குவித்து வைத்துள்ளது. உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள ரஷ்யா திட்டமிட்டு வருகின்றது என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டுகின்றது. அவ்வாறு படையெடுத்தால் உக்ரைனுக்கு அமெரிக்காவும் நேட்டோ படைகளும் ஆதரவளிக்கும் என்று வெள்ளை மாளிகை வெளிப்படையாகவே அறிவித்திருந்தது. இப்படியிருக்கையில், உக்ரைன் மீது படையெடுப்பதற்காக தனது படைகளின் ஒரு பகுதிக்குத் தானே தாக்குதல் நடத்த ரஷ்யா திட்டமிட்டுள்ளது என்று அமெரிக்கா தற்போது குற்றஞ்சாட்டியுள்ளது. தன்படைகள் மீது தானே தாக்குதலை நடத்திவிட்டு, உக்ரைனே இந்தத் தாக்குதலை நடத்தியது என்று தெரிவித்துப் படையெடுக்க ரஷ்யா திட்டமிட்டுள்ளது என்றும் அமெரிக்கா தன் குற்றச்சாட்டில் குறிப்பிட்டுள்ளது. எனினும் ரஷ்யா அதை மறுத்துள்ளது. (ம)



# கொரோனா விதிமீறல்: போரிஸ் மன்னிப்பு!

லண்டன், ஜன. 17

கொரோனாப் பெருந்தொற்று விதிமீறல் காரணமாக மன்னிப்புக்கேட்டார் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன்.

கடந்த 2020ஆம் ஆண்டு ஊரடங்கு காலத்தில், கொரோனா கட்டுப்பாட்டு வீதியை மீறி விருந்து நிகழ்வு ஒன்றில் பிரதமர் போரிஸ் ஜோன்சன் பங்கேற்றார். இந்த நிலையில் அவரது இந்தச் செயலுக்கு கடந்த ஓர் ஆண்டாகவே எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்து வந்தன. மேலும் போரிஸ் பதவிவிலக வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தனது செயலுக்கு பிரதமர் போரிஸ் ஜோன்சன் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

இதுகுறித்து போரிஸ் பேசியதாவது: 'கொரோனா விதிகளை மதிக்கும் லட்சக்கணக்கான பிரிட்டன் மக்களுக்கு என் செயல் எப்படி இருக்கும் என்று என்னால் உணர முடிகிறது. இந்த அவை மூலமாக அவர்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன்' என்று தெரிவித்தார். ஆனால் போரிஸ் ஜோன்சனின் மன்னிப்பை எதிர்க்கட்சித் தலைவர்கள் கடுமையாக விமர்சித்தனர். (ம)

# டோங்கா எரிமலை வெடிப்பு ஜப்பானில் சுனாமி அலை?



டோக்கியோ, ஜன. 17

டோங்காவில் கடலுக்கு அடியில் ஏற்பட்ட எரிமலை வெடிப்புக் காரணமாக, ஜப்பானிலும் சுனாமி அலைகள் ஏற்படுகின்றன என்று ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பசுபிக் நாடான டோங்காவில் நேற்றுமுன்தினம் முன்னிரவு கடலுக்கு அடியில் மிகப்பெரும் எரிமலை வெடிப்பு ஏற்பட்டது. இதனால் டோங்காவை சுனாமி அலைகள் தாக்கின. இந்த எரிமலை வெடிப்பின் தாக்கம் ஜப்பானிலும் உணரப்படுகின்றது என்று ஜப்பான் புவியியல் ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. சுமார் 3 மீற்றர் அலைகள் ஜப்பானைத் தாக்குகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# கொரோனாத் தொற்று முடிவுக்கு வரும்!

## அமெ. நிபுணர் நம்பிக்கை

வொஷிங்டன், ஜன. 17

இந்த ஆண்டில் கொரோனாப் பெருந்தொற்றில் இருந்து நாம் முழுமையாக விடுதலை பெறுவோம் என்று நம்பிக்கை தெரிவித்தார் அமெரிக்க நிபுணர் மஹ்முத்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கொரோனாப் பெருந்தொற்று ஒட்டுமொத்த உலகத்துக்கும் சவாலாக உள்ளது என்பது உண்மைதான். ஆனால், இந்தப் பெருந்தொற்றுக்கு விரைவில் முடிவு கட்டப்படும். உலக நாடுகள் தடுப்பூசி ஏற்றலில் அளப்பெரும் சாதனையைப் புரிந்துள்ளன. குறிப்பாக 160 கோடி தடுப்பூசிகளை ஏற்றியுள்ள இந்தியா கொண்டாடப்பட வேண்டியதுதான். இந்தத் தரவுகளின் அடிப்படையில் பார்த்தால் இந்த வருடம் கொரோனாவுக்கு முடிவு கட்டப்படும் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண மோசடி: சகோதரிகள் கைது

கொழும்பு, ஜன.17

வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக்கூறிப் பல பெண்களிடம் பண மோசடி செய்த சகோதரிகள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் கண்டி, கட்டுகஸ்தோட்ட பிரதேசத்தில் நடந்துள்ளது. புதுப்பிக்கப்படாத உரிமத்தைப் பயன்படுத்தி சட்டவிரோதமான வேலை வாய்ப்பு நிறுவனம் ஒன்றை நடத்திய இவர்கள் பல்வேறு பெண்களிடம் 24 லட்சத்து 45 ஆயிரம் ரூபா மோசடி செய்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. (எ-இ)



தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள டி.எம்.ஏ.சதுரங்க நேற்றுமுன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். (எ-10-113)

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.17



பொரளை கிறிஸ்தவ தேவாலயத்தில் கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டமை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையாது என பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

கண்டி - மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்களை நேற்றுமுன்தினம் சந்தித்து, ஆசி பெற்ற அவர், அதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இதற்குமுன்னர் லங்கா மருத்துவமனை வளாகத்திலிருந்து கைக்குண்டொன்று மீட்கப்பட்டது. பொரளை கிறிஸ்தவ தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்துச் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டு, சட்டத்துக்கு முன் நிறுத்தப்படுவார்கள்- என்றார். (எ-இ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 09 . 12 . 1951 — மறைவு 19 . 12 . 2021



**அமரர் கந்தையா சந்திரசேகரன்**

**(ஓய்வுநிலை அதிபர், மத்தியஸ்தர், வலிகாமம் மேற்கு (சங்கானை)**

வலிகாமம் மேற்கு (சங்கானை - 250) மத்தியஸ்த சபையின் மத்தியஸ்தர்களில் ஒருவராக கடந்த மூன்று வருடங்களாக சிறந்த சேவையாற்றி அமரத்துவமடைந்த அமரர் கந்தையா சந்திரசேகரன் அவர்களின் 31ஆம் நாளில் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

மத்தியஸ்த சேவையில் அன்னாரது சேவை என்றுமே மறக்க முடியாது. அன்னார் ஆற்றிய ஏனைய சமூகப் பணிகளையும் இவ்வேளையிலே நினைவு கூர்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தவிசாளரும், மத்தியஸ்தர்களும்,
வலிகாமம் மேற்கு (சங்கானை)

(CR 7114) 1-6

# தரமற்ற எரிபொருளே தற்போது இறக்குமதி!

## குற்றஞ்சாட்டுகின்றது ஜே.வி.பி.



தற்போது இலங்கைக்கு தரமற்ற எரிபொருள் இறக்குமதி செய்யப்படுகின்றது என்று மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிலகாலமாக இலங்கைக்கு 92 ஒக்டேன் பெற்றோல் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டது. தற்போது ஒக்டேன் 91 ரக பெற்றோல் மாத்திரமே இறக்குமதி செய்யப்படுகின்றது. அந்த வகைப் பெற்றோலுடன் மண்ணெண்ணெய் கலக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

## அராலியில் இன்று

# எம்.ஜி.ஆரின் 105ஆவது பிறந்ததின நினைவுநிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 17

அராலி மத்தி குழுக்கள்குளம் எம்.ஜி.ஆர். விளையாட்டுக்கழக கம் நடத்தும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் 105ஆவது பிறந்ததின நினைவுநிகழ்வு, கழக மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடை பெறவுள்ளது.

கழகத் தலைவர் கு.பிரதீபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்த ருமான ஈ.சரவணபவன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன்குணதிலக, அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை அதிபர் வை.விமலன், அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை அதிபர் பி.தவரத்தினம் ஆகியோர் கலந்துகொள்வர். (கு)

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 01 . 1941 — மறைவு 15 . 01 . 2022



**திரு. முருகையா நகுலேஸ்வரன்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம்)

கீரிமலை வீதி, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. முருகையா நகுலேஸ்வரன் நேற்றுமுன்தினம் (15.01.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகையா - அன்னம்மா தம்பதியினரின் அன்புப் புத்திரனும், ரஞ்சினி (இளைப்பாறிய ஆசிரியை)யின் கணவரும், பிரதாபனின் தந்தையும், கிருபாகரன், மகேஸ்வரன், கெங்காரதன், விஜயலக்சுமி, பரந்தாமன், அனந்தலக்சுமி, ராஜலக்சுமி, ராஜராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், விமலராணி, புஷ்பவதி, தேவிகாராணி, காலஞ்சென்ற சிவானந்தன், தனபாலினி, மனோகரன், காலஞ்சென்ற யோகநாதன் ஆகியோ ரின் மைத்துனரும், அனுராதா, உமாசுதன், ஆகியோரின் சிறிய தந்தையும், துவாரகன், மாயவன், பிரசன்னா, பைரவி ஆகியோரின் பெரிய தந்தையும், மேனகா, கார்த்திகேயன், துஷியந்தி, அமலன், ரஜீகன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2022) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவிட்டபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 922 5648

(cs42274) (3.6)

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 06 . 1940 — இறப்பு 16 . 01 . 2022



**திருமதி யோகேஸ்வரி திருச்செல்வம்**

(ஓய்வுபெற்ற இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன முகாமையாளர்- வவுனியா)

தாமோதரம்பிள்ளை வீதி, சப்பச்சிமாவடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி திருச்செல்வம் நேற்று (16.01.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருச்செல்வம் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோ கத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ராஜேஸ்வரி, சிவப்பிரகாசம் மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தயாளவதனி, யாழேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சற்குணசீலன், தக்ஷிகா ஆகியோரின் பாசமிகு மாமியும், சர்மிலன், அர்ச்சனா, யஷ்மிகா, அனுஷ்காந், ஓவியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

***அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.***

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சப்பச்சிமாவடி, சாவகச்சேரி.

(cr.37365) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்

## மின்வேலியில் சிக்கிய பெண் உயிரிழப்பு

சட்டவிரோத மின்சார வேலியில் சிக்கிப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கொப்பபொல, வெலஸ்கஸ்தென்ன பிரதேசத்தில் நடந்துள்ளது. வயல் ஒன்றுக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கியே பெண் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் (வயது-47) என்று தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோத மின்சார வேலியை உருவாக்கிய குற்றச்சாட்டில், 28 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பக்கதையின் அடுத்த பாகத்தை செயற்படுத்த முனையும் மைத்திரி!

## திலும் அமுனுகம கூறுகின்றார்

கொழும்பு, ஜன.17

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைக்கும் ஒப்பந்தத்தை சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தற்போது செயற்படுத்துகிறார். அப்பம் சாப்பிட்ட கதையின் இரண்டாம் பாகத்தை அரங்கேற்ற முன் சுந்திரக் கட்சியை அரசாங்கத்தில் இருந்து வெளியேற்றுவது சிறந்ததாக அமையும் என அரசாங்கத்தில் உரிய தரப்பினருக்கு தொடர்ந்து வலியுறுத்தியுள்ளேன்.

இவ்வாறு போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன 2014 ஆம் ஆண்டு தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் ஒரு மேசையில் அமர்ந்து அப்பம் சாப்பிட்டு அடுத்தநாள் காலையில் ஐக்கிய தேசிய கட்சியுடன் ஒன்றிணைந்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியதை எவரும் மறக்கவில்லை.

சூழ்ச்சிகளுக்கு மத்தியில் தோற்றம் பெற்ற தேசிய அரசாங்கத்தை சிறந்த முறையில் சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனா முன்னெடுத்துச் செல்லவில்லை. ஐந்து வருட கால ஆட்சியும் பலவீனமடைந்ததால் நாட்டு மக்கள் பல நெருக்கடிகளை எதிர்கொண்டார்கள்.

2019ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சி பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அரசாங்கத்தில் ஒன்றிணைந்த போதிலும் அவர்களின் செயற்பாடு தொடர்பாக எந்தநிலையிலும் அவதானத்துடன் செயற்படுகிறோம். சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதால் அரசாங்கத்தின் இருப்புக்கு எவ்விதபாதிப்பும் ஏற்படாது. அரசாங்கத்தில் இருந்து கொண்டு அரசாங்கத்தை விமர்சிப்பது பயனற்றது. ஆகவே சுதந்திரக் கட்சியினர் அரசாங்கத்தில் இருந்து தாராளமாக வெளியேறலாம் என்பதை பலமுறை பகிரங்கமாகக் குறிப்பிட்டுள்ளோம்.

அரசாங்கத்தின் கொள்கையுடன் இணங்க முடியாவிடின் தாராளமாக வெளியேறலாம் என ஜனாதிபதியும் குறிப்பிட்டுள்ளார். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. மக்களின் நலனைக்கருத்திற் கொண்டு இனிவரும் நாள்களில் கடுமையான தீர்மானங்கள் முன்னெடுக்கப்படும்-என்றார். (எ-இ)

# யாழில் இராணுவத்தினரால் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.17

கொரோனாத் தடுப்பூசியின் மூன்றாவது டோஸ் செலுத்தும் நடவடிக்கைகள் நேற்று யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இராணுவத்தினரின் நடமாடும் சேவை மூலம் பைஸர் தடுப்பூசி மக்களுக்கு ஏற்றப்பட்டது.

(எ-20)

# விபத்தில் மூவர் சாவு!

கொழும்பு, ஜன.17

அம்பாறை, தமன பிரதேசத்தில் நேற்று மாலை நடந்த விபத்தில் தந்தை, மகள் உட்பட மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

ஐந்துபேர் கடுகாயமடைந்துள்ளனர்.

கார் ஒன்றும், டிப்பர் வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து நடந்துள்ளது. விபத்தில் உயிரிழந்தவர்களில் தந்தையும், ஒன்றரை வயது மகளும் அடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் அம்பாறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-இ)


## தவறிவிட்டது

கந்தையன் யோகநாதன் ஆகிய எனது கைப்பை யாழ். நகர்ப்பகுதியில் 13.01.2022 அன்று தவறவிடப்பட்டுள்ளது. இதனுள் அடையாள அட்டை (194920803577), வாகன அனுமதிப்பத்திரம், இன்சுரன்ஸ், Tax என்பன உள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

077 661 1753

## தேவை

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு நித்திய பூஜைக்கு அந்தணக் குருக்கள் தேவை.

ஆலயத்திற்கு நித்திய நைமித்திய பூஜையும் குருத்துவ பணியும் செய்யக் கூடிய அந்தண குரு தேவை.

அதைப்போன்று ஆலயத்திற்கு நித்திய உதவியாளரும் தேவை.

ஆகவே விரும்பியவர்கள் எதிர்வரும் 25.01.2022 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பித்து ஆலய பரிபாலன சபையின்ரிடத்தில் நேரிலே தங்கள் வேதனங்கள் போன்றவற்றை கதைத்து தீர்மானிக்கலாம்.

நன்றி

ஆலய பரிபாலன சபை
077 154 6842

(CR7117)1

# வீனஸ் விசேட வைத்தியாலை

VENUS SPECIALITY HOSPITAL (PVT) LTD

# VENUS SPECIALITY HOSPITAL (PVT) LTD

## அதிஉயர் தொழில்நுட்ப வசதிகளுடன் நவீன மருத்துவ சேவையை வழங்கி வரும் வீனஸ் விசேட வைத்தியசாலையில் புதிய CT பிரிவு ஆரம்பம்

## 32 SLICE CT SCANNER வடமாகாணத்தில் வீனஸ் விசேட வைத்தியசாலையில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்படுகிறது.

காலம் : 17.01.2022 திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு

இந்த நிகழ்வில் சுகாதார பணியாளர்கள் மற்றும் எம் சேவையை பெற்றவர்கள் பெற இருப்பவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## "THE SOUND OF SILENCE"



## Services

- Consultation Services
- 24 HRS OPD / Ward Admission
- Surgeries (All Kinds)
- Laparoscopy Surgeries
- Ultrasound Scanning Unit
- Physiotherapy Unit
- Modular Operation theatre
- CT Scanning Department
- ICU / ETU
- 2D - ECHO, ECG, ETT
- Hi Tech Laboratory
- Digital X - Ray Department
- 24 HRS Pharmacy
- 24 HRS Ambulance Service

தொடர்புகளிற்கு: 136, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் .

Tel: 021 222 4172 , 021 222 8470, 021 222 8475, 0706136136, 0775656824 E-Mail : venushos136@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மீண்டும்....

இந்தப் புதிய அரசியல் கூட்டணியின் மையப்புள்ளியாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா இருப்பார் என்றும், குமார வெல்கம, அர்ஜுன ரணதுங்க, அநுர பிரியதர்சன யாப்பா, சுசில் பிரேமஜயந்த ஆகியோர் ஒருங்கிணைந்து செயற்படுவார்கள் என்றும் அறிய முடிகின்றது.

இந்தப் புதிய அரசியல் கூட்டணி குமார வெல்கம தலைமையில் பதிவு செய்யப்பட்ட புதிய அரசியல் கட்சியான புதிய லங்கா சுதந்திரக் கட்சியை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, "எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதி எமது கட்சியின் தலைமைக் காரியாலயத்தை பத்திரமுல்லயில் திறக்கத் தீர்மானித்திருக்கின்றோம். எமது கட்சியை மையப்படுத்தி பரந்த அணி ஒன்றை உருவாக்குவதற்குத் திட்டமிட்டுள்ளோம்" என்று கூறியுள்ளார்.

அதேநேரம், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசில் இருந்து வெளியேறி எம்முடன் இணைந்துகொள்ளத் தீர்மானித்தால் அவருடனும் பேச்சு நடத்தத் தயாராக இருக்கின்றோம் என்றும் குமார வெல்கம தெரிவித்திருக்கிறார்.

ஜனநாயகம், மனிதாபிமானப் பண்புகள் நிறைந்த அரசியல் கலாசாரம் ஒன்றையும், அனைவரும் சமத்துவமாக வாழும் அமைதியான சூழல் ஒன்றையும் கட்டியெழுப்புவதற்கு, சமூகத்தை வழிநடத்தக் கூடிய அரசியல் கட்சி ஒன்று அவசியமாகின்றது என்று கூறியுள்ள குமார வெல்கம, எமது கொள்கைகளையும், இலக்குகளையும் ஏற்றுக்கொள்பவர்கள் எம்முடன் இணைந்து பயணிக்க முடியும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் பதவி பறிக்கப்பட்ட சுசில் பிரேம ஜயந்தவும் இந்தக் கூட்டணியுடன் இணைந்து செயற்படவுள்ளார். அதே நேரம் ராஜபக்சவின் செயற்பாடுகளால் அதிருப்தி அடைந்துள்ள மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த அரசியல் கூட்டணியில் இணையக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் இந்த நகர்வுகள் கொழும்பு அரசியல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. ராஜபக்சக்களை ஆட்சியில் இருந்து அகற்றி, மைத்திரிபால சிறிசேன பதவிக்கு வந்தமைக்கு சந்திரிகாவின் காய்நகர்த்தல்களே முக்கிய காரணமாக அமைந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (எ-இ)

### சு.கட்சியின்....

அம்பாந்தோட்டையில் நடந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 15 லட்சம் வாக்குகள் பொதுஜன பெரமுனவுடன் இணைந்ததால்தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மாற்றம் ஏற்பட்டது. எவரும் தனித்து வெற்றிபெறவில்லை. அமைச்சுப் பதவிகள் வகிக்கும் அனைவரும் சுதந்திரக் கட்சிக்குக் கடமைப்பட்டுள்ளனர் என்றும் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுனவுக்கும், அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே அண்மைக்காலமாக முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இரு தரப்பினரும் பொதுவெளியில் ஏனைய தரப்பை விமர்சித்து வருகின்றனர்.

அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த அமைச்சர் நாமல் ராஜபக்ச, விரும்பினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசில் இருந்து வெளியேறமுடியும் என்று கூறியிருந்தார். பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் 'அரசை விமர்சிப்பவர்கள் அரச கூட்டணியில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும்' - என்று கூறியிருந்தார். (எ-இ)

### மின் துண்டிப்பு....

வெட்டுக்கு மக்கள் தயாராக இருக்க வேண்டும் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் சௌமிய குமாரவாடு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இரண்டு அல்லது மூன்று நாள்களுக்குப் போதுமான 3 ஆயிரம் மெற்றிக்தொன் டீசலே இப்போது மின்சார சபையிடம் இருக்கின்றது. 22 நாள்களுக்கு போதுமான உராய்வுஎண்ணெய் மின்சாரசபைக் களஞ்சியசாலையில் உள்ளது.

மூன்று நாள்களின் பின்னர் மின்வெட்டை நடைமுறைப்படுத்தி மின்சாரத்தின் கேள்வியைக் குறைக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அவ்வாறு செய்யாவிட்டால் மின்சாரக் கட்டமைப்பின் சமநிலையைத் தொடர்ந்து பேண முடியாது.

நீர்மின் உற்பத்தி நடவடிக்கையின்போது விவசாயம், குடிதண்ணீர் மற்றும் சூழல் என்பவற்றைக் கருத்திற் கொண்டு நீர் முகாமைத்துவம் செய்ய வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. அதனால் நீர் மின் உற்பத்தி வரையறுக்கப்பட்டுள்ளது.

அனுமதிக்கப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களின் நிர்மாணப் பணிகளில் ஏற்பட்டுள்ள தாமதம் மற்றும் புதிய மின் உற்பத்தித் திட்டங்களை இரத்துச் செய்தல் போன்றவற்றால் மின் விநியோகத்தை வழமைக்குக் கொண்டு வருவதற்கான மாற்று உற்பத்தி நிலையங்கள் நாட்டில் இல்லை - என்றார். (எ-இ)

### எரிபொருள்...

ரிக்க டொலர் தேவை என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

தேவையான நிதியை இலங்கை மத்திய வங்கி கட்டம் கட்டமாக விடுவிக்க வேண்டும் என்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரியுள்ளது.

அதேவேளை, இந்த நிதியைத் திரட்டுவது தொடர்பாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று நடந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, நிதி அமைச்சு, வலுசக்தி அமைச்சு, இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களின் பிரதானிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

### கொரோனா...

கொரோனாவுக்கான நான்காவது தடுப்பூசி தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஒமிக்ரோனின் தொடர்ச்சியாக வரக்கூடிய அடுத்த திரிபுகள் லேசானவையாக இருக்கும் என்றோ அவை தடுப்பூசிகளுக்குக் கட்டுப்படும் என்றோ நம்புவதற்கு நம்மிடம் எந்த உத்தரவாதங்களும் இல்லை. அதனால் பல கிரேக்க எழுத்துக்களைத் தெரிந்து கொள்வதற்குத் தயாராயிருங்கள் என்று அமெரிக்காவின் முக்கிய தொற்று நோய் மற்றும் வைரஸ் மூலக்கூற்றுத் துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் சிலர் புதிய எச்சரிக்கையை விடுத்திருக்கின்றனர்.

கொரோனா வைரஸ் திரிபுகளது ஆகப் பிந்திய வடிவமாகிய ஒமிக்ரோன் திரிபு லேசானது, வீரியம் குறைந்தது என்றும் அதன் வருகை தொற்று நோயின் தீவிரத் தன்மையைத் தணித்து அதை ஓர் உள்ளூர் சமூக நோயாக மாற்றிவிடும் எனவும் பரவலாக நம்பப்பட்டு வருகின்ற நிலையிலேயே நிபுணர்கள் அதைத் "தப்புக்கணக்கு" என்று கூறி மறுத்திருக்கின்றனர். சவால்கள் நிறைந்த சூழ்நிலையில் ஒமிக்ரோனுடன் எல்லாம் முடிந்துவிடும் என்று மிதப்புக் கொள்வதில் நன்மைகளை விட ஆபத்துகளே அதிகம் என்று அறிவியலாளர்கள் எச்சரித்துள்ளனர். (எ-இ)

### வன்முறை...

துள்ளோம் என்று தெரிவித்து பார்வையாளர் பகுதியில் காத்திருந்துள்ளனர். நோயாளர்களைப் பார்வையிட 'பாஸ்' நடைமுறை உள்ளதால் அவர்களால் உடனடியாக உள்ளே செல்ல முடியவில்லை. மருத்துவமனை விடுதியில் இருந்து வெளியே வந்த நபர் ஒருவர் மீது திடீரென இந்தக் கும்பல் தாக்குதல் நடத்த முயன்றுள்ளனர். அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதை அடுத்து பொலிஸார் உடனடியாக சம்பவ இடத்துக்கு வந்துள்ளனர். பொலிஸாரைக் கண்டதும் அந்தக் கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது. இந்தச் சம்பவத்தால் மருத்துவமனையில் பதற்ற நிலைமை காணப்பட்டது.

நேற்றுக் காலை நடந்த மோதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை இலக்கு வைத்தே வன்முறைக் கும்பல் மருத்துவமனைக்குவந்ததுஎன்றுகூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-110)

### ஒமிக்ரோன்...

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, தொற்று வீதத்தைக் கட்டுப்படுத்துவதில் அரசுக்கோ அல்லது சுகாதார அதிகாரிகளுக்கோ அக்கறை இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளைப் புறக்கணிப்பதால் நிலைமை மோசமடைந்துள்ளது. தொற்றுநோய் கட்டுக்குள் வந்துவிட்டது என்ற அனுமானத்தின் கீழ், தடுப்பூசியின் மூன்றாவது அலகை மக்கள் புறக்கணித்துள்ளனர்.

அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டதை விடவும் ஒமிக்ரோன் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். ஒமிக்ரோன் மாறுபாட்டால் நாடு அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது- என்றார். (எ-இ)

### கூட்டமைப்புடன்...

வெல்லும் வகையிலும்தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதற்கான வியூகத்தை ஜனாதிபதி வகுத்துள்ளார் என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கோத்தாபய ராஜபக்ச, ஜனாதிபதியாகப் பதவியேற்று இரு வருடங்கள் கடந்துள்ள போதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இதுவரை உத்தியோகபூர்வ சந்திப்பு எதையும் நடத்தவில்லை. கடந்த வருடம் ஜனாதிபதி செயலகத்தால் சந்திப்புக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அது இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டது.

தற்போது, புதிய வருடத்தில் கூட்டமைப்புடன் நேரடிப் பேச்சு ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். இந்த மாத இறுதி வாரத்தில் இந்தப்பேச்சு இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு, வடக்கு, கிழக்கு அபிவிருத்தி, மனித உரிமைகள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் உள்ளிட்ட முக்கியமான விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்படவுள்ளது என்று அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (எ-22)

### தவறான...

நாவற்குழி ஐயனார் கோயிலுக்கு அருகில் உள்ள பொதநோக்கு மண்டபத்தில் இளைஞர் ஒருவர் தூக்கில் தொங்குவதை அவதானித்த அயலர்கள், அவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். ஆயினும் செல்லும் வழியில் இளைஞர் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-9)

### மிதிவெடி....

டுத்து சாவகச்சேரி நீதிமன்றின் அனுமதி பெற்று, அந்த மிதிவெடியை அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-159)

## தனியார் காணி ஊடாக வீதி: படைத்தரப்பு முயற்சி?

யாழ்ப்பாணம், ஜன.17

வலி. வடக்கில் கட்டுவன் - மயிலிட்டி வீதியில் விமான நிலையத்துக்கு பாதை ஏற்படுத்துவதற்காக தனியார் காணிகளை அபகரிக்க முயற்சிக்கப்படுகின்றது என்று காணி உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

விமான நிலையத்துக்கு தார் படுக்கை வீதி அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் 400 மீற்றர் நீளத்துக்கு 35 அடி அகலம் கொண்ட தனியார் காணிகளுடன் சேர்த்து வீதியை மூடி பாதுகாப்பு படையினர் வேலி அமைத்துள்ள நிலையில், அதை விடுவிக்க மறுப்புத் தெரிவித்து வந்தனர். அதனால் வீதி அமைப்பு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன.

நேற்றுமுன்தினம் விமானப் படையினர் சகிதம் அங்கு சென்ற வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் ஒப்பந்தகாரர்கள் ட்ரோன் மூலம் படம் பிடித்து ஆய்வுகளை மேற்கொண்டனர் என்று கூறப்படுகின்றது.

பழைய வீதியைத் திருத்தி அமைக்காது, வீதியோரம் உள்ள தனியார் காணிகள் ஊடாகப் புதிதாக வீதி அமைக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்று காணி உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். தங்கள் காணிகளை விடுவிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்குப் பொய்களைக் கூறி பிரச்சினையைத் தீர்க்கமுடியாது!

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு



**கொழும்பு, ஜன.17**

**உண்மையான பிரச்சினைகளை மறைத்து, மக்களுக்குப் பொய்களைக்கூறுவதன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணமுடியாது என்று ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:- கஷ்டமான சந்தர்ப்பங்களில் அர்ப்பணிப்புக்களைச் செய்யவேண்டும் என்று மக்களிடம் கோரிக்கை விடுப்பதற்குப் பதிலாக அமைச்சர்கள் அர்ப்பணிப்புகளைச் செய்து முன்னுதாரணத்தை வழங்கவேண்டும்.

நேற்றுமுன்தினம் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. எதிர்காலத்திலும் சிலமணித்தியாலங்கள் மின் விநியோகத்தை துண்டிக்க நேரிடும் என மின்சார சபை கூறுகின்றது. எரிபொருள் இல்லாதமையே இதற்குக் காரணம். நிலக்கரி தொடர்பான பிரச்சினையும் உள்ளது. மக்களிடம் எதனையும் மறைக்க முடியாது. மின்சாரம் துண்டிக்கப்படமாட்டாது என மின்சக்தி அமைச்சர் கூறும்போது, மின்சார சபையின் தலைவர் சிறிதுநேரம் மின்சாரத்தைத் துண்டிக்க நேரிடும் என்கிறார்.

அப்போது வீட்டின் கூடத்தில் இருப்பவருக்கு கேள்விகள் எழும். சமூக ஊடகங்கள் மின்சாரம் துண்டிக்கப்படுவது தொடர்பான பட்டியல் வெளியிட்டுள்ளன. எதனையும் எவராலும் மூடிமறைக்கமுடியாது. மக்களுக்கு உண்மையைக் கூறிப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டும்.

நாங்கள் அர்ப்பணிப்புகளைச் செய்ய ஆரம்பிப்போம். அரசியல்வாதிகளே அர்ப்பணிப்பைச் செய்யவேண்டும். மக்களை அர்ப்பணிப்புகளைச் செய்ய வேண்டும் என்று கோரினால், அரசியல்வாதிகளுக்கு பைத்தியம் எனக் கூறுவார்கள் - என்றார். (எ-இ)

## ஜயசுந்தர அனுப்பிய பாரதூரமான செய்தி

ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர, தனது பதவியில் இருந்து விலகுவதற்கு சில நாள்களுக்கு முன்னர், தனக்கு நெருக்கமான நண்பர் ஒருவருக்கு சர்ச்சைக்குரிய வட்ஸ் அப் செய்தியை அனுப்பியுள்ளார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள் ளன.

அந்த நெருக்கமான நண்பர் தற்போதுவெளிநாட்டில் இருக்கின்றார். ஜயசுந்தர பதவி விலகும் செய்தியை அறிந்து இலங்கையில் என்ன நடக்கின்றது என வட்ஸ் அப் தகவல் மூலம் வினவியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

இதற்கு ஆறு வார்த்தைகள் கொண்ட குறுகிய பதிலை ஜயசுந்தர அனுப்பியுள்ளார். ஆறு வார்த்தைகள் என்ற போதிலும் அவற்றில் மிகப் பாரதூரமான அர்த்தங்கள் அடங்கியுள்ளன என்று கூறப்படுகின்றது.

ஜயசுந்தரவின் பதிலில் 'Only god can save our country' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது என்று அந்த ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதன் தமிழ் அர்த்தம் கடவுளால் மட்டுமே எமது நாட்டைக் காப்பாற்ற முடியும் என்பதாகும். (எ-இ)


### New Admissions For

Gr - 10
English Literature Classes
Contact: 070 382 8632

### பணிப்பெண் தேவை

திருநெல்வேலியிலுள்ள குடும்பம் ஒன்றிற்கு சமையல் செய்வதற்கு 25 - 40 வயதிற்கு இடைப்பட்ட பெண் தேவை. மாநகரசபை எல்லைக்கு உட்பட்டிருத்தல் விரும்பத்தக்கது.

077 931 0845 (cs 42277) (2.6)

### பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள **புடைவைக்கடைக்கு** முகாமையாளர் (பெண்) சம்பளம் (25000 - 28000) மற்றும் விற்பனையாளர் (பெண்) சம்பளம் (18000 - 22000) தேவை.

077 741 9511

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A-9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக் கிணற்றடி அருகாமையில் நிலப்பரப்பு 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 M தூரம். பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை.
தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 077 814 7389, 077 614 7333

16.01.2022 ஆம் திகதி வெளிவந்த மேற்படி விளம்பரம் 14 பரப்பு 08 அடிப்பாதை என தவறுதலாக பிரசுரமாகியது. இதனை 08 பரப்பு 14 அடிப்பாதை என திருத்தி வாசிக்கவும்.

### வரவேற்பாளர் தேவை

யாழ்நகர் மத்தியில் அமைந்துள்ள உல்லாச விடுதியில் கடமையாற்றுவதற்கு வரவேற்பாளர்கள் இருவர் தேவை.
- காலை 7.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணிவரை
- இரவு 7.00 மணி தொடக்கம் காலை 7.00 மணிவரை

ஆங்கிலம், சிங்களம் நன்கு பேசக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். (cs.42278) (2.6)

021 222 1326, 021 222 1327, 077 821 0122

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி ஐயனார் கோவில் வீதியில் 18 அடி பாதையுடன் 18 பரப்புக் காணி 1 1/2. பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (மேட்டுநிலம், நிலபரப்பு, நாவற்குழி சந்தியிலி ருந்து 1/2 km தூரம்). ஒரு பரப்பின் விலை 3 லட்சம்.

தொடர்பு: 077 911 6983, 077 658 5999, 077 288 0152, 077 623 4204. (CS 3427 A)1-6

### தென்னந்தோட்டங்கள் விற்பனை உண்டு

எழுதுமட்டுவாழ் A-9 வீதியிலிருந்து 3/4 km தூரத்தில் 12 1/2 ஏக்கர், 16 ஏக்கர் 28 ஏக்கர் காணிகள் விற்பனைக்கு உண்டு.

074 377 1960, 077 653 1983

### விற்பனைக்கு

யாழ். K.K.S. வீதியில் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் 2 பரப்பில் அமைந்த காணியில் புதிய வீடும். யாழ் செட்டித்தெருவில் 3 பரப்பு காணியும் புதிய மாடி வீடும். யாழ். கைலாசபிள்ளையார் கோவிலிற்கு அண்மையில் 3 பரப்பு காணியில் அமைந்த வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 2325 565

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழி A-32 மெயின் றோட்டில் 1ஆம் வீதியில் 51 பரப்புக்காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
நாவற்குழி சந்தியிலிருந்து 300 m தூரம் வீடு அமைப்பதற்கு நல்ல சூழல். 1 நிலப்பரப்பின் விலை 5 லட்சம்

076 890 9259, 077 015 0353


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 15 . 02 . 1944



மறைவு 18 . 12 . 2021

கடந்த (18.12.2021) சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி
**அமரர்**

### விஜயரத்தினம் மனோன்மணி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (15.01.2022) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (17.01.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**இராசவீதி,**
**கோப்பாய் தெற்கு,**
**077 728 3791** (cs 42275) (2.6)

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.